REGISTERED No. M. 1014.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.
விடுபெறநில்.

வெண்டாமரை ௫.	1917-ம் ஆடு ஆகஸ்டு, செப்டம்பர் ௴	இதழ் ௮-௯.

பத்திராதிபர்:— சி. பங்காருப் பத்தர்,
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்,
புதுவை.

வருடச் சந்தா

உள்ளூரார்க்கு ரூ 1	வெளிநாட்டுக்கு ரூ 2
வெளியூரார்க்கு ரூ 1¼	தனிச் சஞ்சிகை அணா 2

புதுவை — லைசேகோன் வின்லேயா பிரஸ்.

உள்ளுறை.

பக்

திருவள்ளுவர் திருக்குறள்:— பத்திராதிபர் ... ...

தமிழ் மருத்துவப் பெட்டி :— ஓர் மருத்துவன். ... ...

கண்மணி கமலா :— ஸ்ரீ தம்பி - புருஷோத்தமப்பிள்ளை. ... .

ஓர்செய்யுட்பொருள் விளக்கம்:- ஸ்ரீ ந. கண்ணுச்சாமிப்பிள்ளை. 16.

தமிழர் கடமை:- ஸ்ரீ கு. ப. அ. க. சதாசிவம்பிள்ளை, அம்மளூர். 165

படிக்காசுப்புலவர் சரிதம்:— ஸ்ரீ சி. கு. நாராயணசாமி முதலியார், கோயமுத்தூர். 167

விரிஞ்சிபுரம்கோயில் கல்வெட்டு:— ஸ்ரீ ரா. வாசுதேவ ஐயர், புதுவை. 170

சகோதரர் ஒற்றுமை:— திராவிடன். 171

தேவஸ்தான நிர்வாகஏற்பாடுகள் :— ஸ்ரீ பொன்னு - முருகேசப்பிள்ளை, புதுவை. 176

நியாயமாலா :— இதோபதேசி. 179

நியாயமாலாவைப்பற்றி :— நடுநிலை நாடி. 180

முக்திகோபநிஷத்:— ஓர் ஆரியன். 181

சுவிவேக தருப்பணம்:— குருபாதசேகரன். 184

புத்தக நன்கொடை:— ஸ்ரீ தி. திருப்புளிசாமி ஐயர். ... 186

ஓர் அநுதாபம்:— ஸ்ரீ தி. திருப்புளிசாமி ஐயர். 186

சந்தாநேயர்கட்கு அறிவிப்பு.

கையிருப்பிலிருந்த காகிதம் செலவாய்விட, மறுபடி மொத்தமாகக் காகிதம் தருவித்ததில் சிறிது காலதாமதம் ஏற்பட்டதால், ஆகஸ்ட், செப்டம்பர் கலைமகள் இரண்டையும் ஒன்று சேர்த்து இம்முறை வெளிப்படுத்தநேர்ந்தது. இனி வழக்கம்போல் வெளிப்படுத்தப்படும். அன்பர்கள் பொறுக்க.

ஓர் நன்கொடை.

நமது கலைமகளின் சந்தாநேயர் ஒருவர் தமக்கு நடந்த திருமணத்தில், கலைமகள்பால் அன்புகூர்ந்து ஐந்து ரூபா நன்கொடையளித்தனர். அது தொகையிற் சிறியதாயினும் அவரது அன்புடைமையை நோக்க அது பெருந்தொகையாகவே மதிக்கற்பாலது. கலைமகள் வளர்ச்சியைக் கருதிய அவ் வன்பர்க்கு நாம் நன்றி செலுத்துகின்றோம். அவர் தம்மைத் தெரிவிக்க விருப்பாமையின் அவர் பெயரைத் தெரிவிப்பதற்கில்லை.

ப - ர்.

உ

ஸ்ரீவாணீ சகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ரு. | 1917-ம் ஆடு ஆகஸ்ட், செப்டம்பர் மீ | இதழ் அ—கூ.

திருவள்ளுவர் திருக்குறள்.

முன்னுரை.

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனர் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளின் ஒப்பற்ற பெருமை உலகமறிந்ததே. திருக்குறளில் சொல்லப்படாத அறங்களும் அறியப்படாத பொருள்களும் இல்லையென்பது அறிவுடையார் துணிபு. பிற நாட்டு மொழிகளிலும் அது மொழிபெயர்க்கப்பட்டுள்ளதே அதன் பெருமையை நன்கு விளக்கும். ஆதலின் திருக்குறளின் பெருமையைப்பற்றி யாம் இங்குப் பேசவந்தோமில்லை.

கற்றவர்க்கே பெரிதும் பயன்படக்கூடிய செய்யுள் வடிவமாகிய திருக்குறளின் பொருளை உரை நடையி லமைத்தால் அது மற்றவர்க்கும் எளிதிற் பயன்படுமென்று கருதினேம் ஆதலின், மேற்படி குறள் ஒவ்வொரு அதிகாரத்தின் பொருளையும் திரட்டி ஒவ்வொரு சிறு வியாசமாக எளிய தமிழ் நடையில் எழுதிவரலாமென நினைத்து, முதற்கண் "கடவுள் வாழ்த்து" என்னும் அதி

காரத்தைச் சுருக்கி எமது சிற்றறிவிற் கெட்டியவாறு பரிமேலழகர் உரையைத் தழுவி எழுதத் துணிந்தேம். யாம் இதிற் புதிதாகச் சொல்லப்போவது ஒன்றுமில்லையாயினும், யாம் எழுதும் வகையில் தவறுகள் நேரலாம். பிழை பொறுத்தருள்வது பெரியோர் கடனாம்.

அறத்துப்பால்.

முதலதிகாரம் — கடவுள் வாழ்த்து.

எதற்கும் முதற்கண் கடவுள் வாழ்த்துக் கூறுதல் முறைமையாதலின், இந் நூற்கண்ணும் முதலில் கடவுள் வாழ்த்துக் கூறப்படுகின்றது.

கடவுள் வாழ்த்து என்பது கடவுளை வாழ்த்துதல் என விரியும். கடத்தல் என்னும் பொருளையுடைய கடவுள் என்னும் தொழிற் பெயர், ஆகுபெயராய் மனம்மொழி மெய்களைக் கடந்து நிற்கும் பொருளைக் குறிக்கும்.

உலகம் தோன்றி நின்று அழியும் காரியமாகவுள்ளது ஆதலின் அதனைத் தோன்றி நின்று அழியச்செய்யும் காரணமாகிய முதற்பொருள் ஒன்றிருந்தே தீரவேண்டும். அது தான் கடவுள் என்று சொல்லப்படுவது. 1. 'எழுத்துக்களெல்லாம், விகாரத்தாலன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறக்கும் அகரமாகிய முதலையுடையனபோல, உயிர்கள், செய்ற்கை யுணர்வாலன்றி யியற்கையுணர்வால் முற்று முணரவல்ல கடவுளாகிய முதற்பொருளையுடையனவாகும்.' எனவே உலகத்திற்கு முதற்பொருள் கடவுள் என்பது பெறப்பட்டது.

நாம் அக் கடவுளுடைய திருவடியை வணங்குதல்வேண்டும். பிறவித் துன்பங்கள் நம்மை விழுங்குகின்றன. துன்பத்தினின்றும் நீங்கி நாம் இன்பமடையவேண்டுமன்றோ? பிறப்புள்ளவரையும் நம்மைத் துன்பங்கள் விடா. ஆதலின் கடவுள் திருவடியைத் தொழுதே பிறவியை யறுத்தல்வேண்டும். அத் திருவடியே பிறவிப் பிணிக்கு மருந்தாகும். நாம் கற்றதெல்லாம் எதற்காக?

---

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

அவனது திருவடியைத் தொழுதற்காகவே. 2. ‘மெய்யுணர்வினையுடைய கடவுளது நல்ல திருவடிகளை வணங்காராயின், எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அக் கல்வியறிவினாலாய பயன் யாது?’ ஒன்றுமில்லை. கல்வியறிவிற்குப் பயன் அவன் தாளைத் தொழுது பிறவியறுத்தலேயாகும்.

வீட்டின்பம் பெறுதற்கு இடைவிடாது இறைவனை உள்ளத்திருத்தல்வேண்டும். 3. ‘அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து செல்லும் இறைவனது மாட்சிமைப்பட்ட திருவடிகளை இடைவிடாது நினைத்தவர்கள், எல்லா வுலகிற்கும் மேலாய வீட் டுலகின்கண் அழிவின்றி வாழ்வார்கள்.’

நமக்கு ஒன்றினிடத்து விருப்பும் ஒன்றினிடத்து வெறுப்பும் உள்ளவரையும் பிறவித் துன்பங்கள் நம்மை விட்டு நீங்கமாட்டா. தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவுமென மூவகையால் வரும் துன்பங்களே பிறவித் துன்பங்களாகும். 4. ‘ஒரு பொருளையும் விரும்புதலும் வெறுத்தலுமில்லாத கடவுளது அடியை இடைவிடாது நினைத்தவர்க்கு, எக்காலத்தும் பிறவித் துன்பங்கள் உண்டாகமாட்டா.’ விருப்பு வெறுப்பற்ற அவன் அடியை நினைத்தவர்க்கு அவ் விரண்டும் இன்மையின், அவை காரணமாக வரும் மூவகைத் துன்பங்களும் இல்லாதனவாகும்.

அழியு மியல்புள்ள சுவர்க்க இன்ப முதலிய காமியங்களைப் பயக்கும் வேள்வி முதலிய நல்வினைகளும் தீவினைகள் போலப் பிறப்புக்கு ஏதுவாகலின், அவ் விருவினைகளும் நம்மை

---

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றாள் தொழாஅ ரெனின்.

3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

4. வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

விட்டு நீங்கவேண்டும். 5. 'இறைவனது மெய்ம்மைசேர்ந்த புகழை விரும்பினரிடத்து மயக்கத்தைப்பற்றி வரும் நல்வினை தீவினை யென்னும் இரண்டு வினைகளும் உளவாகா.'

இறைவன் அருளிச்செய்த ஒழுக்க நெறியில் தவறாது நின்றாலல்லது நாம் வீடுபெறுதல் முடியாது. 6. 'மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்தாசைகளையும் அறுத்த கடவுளது மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றவர், பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வர்.' இங்ஙனம் இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவன் நெறி நிற்றலும் செய்தவரே வீடு பெறுதற்கு உரியராவர்.

இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் செய்யாவிடத்து நாம் பெருங் குற்றத்தின்கட்படுவோம். நம் துன்பங்களை யொழிக்க முயலவேண்டுமன்றோ? 7. 'ஒருவாற்றானும் தனக்கு நிகரில்லாத கடவுளது திருவடியை யிடைவிடாது நினைத்தார்க்கல்லது மனத்தின்கண் உண்டாகும் துன்பங்களை நீக்குதல் முடியாது.' அவனடியை நினையாதவர்கள் பிறவிக் கேதுவாகிய காம வெகுளி மயக்கங்களை மாற்றமாட்டாமையின், பிறந்து அவற்றால் வரும் துன்பங்களுள் அழுந்துவர்.

அறியும் பொருளினும் சிற்றின்பத்திலும் நாம் அழுந்தியுள்ளவரையில் பேரின்பத்தை நாம் எங்ஙனம் பெறுதல்கூடும்? ஆதலின் அவ் விரண்டினும் நமக்குள்ள அவாவை யழித்தல் வேண்டும். 8. 'அறக்கடலாகிய இறைவனது திருவடியாகிய

5. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

7. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

8. அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

புணையைச் சேர்ந்தார்க்கல்லது அதனிற் பிறவாகிய பொருளும் இன்பமுமாய கடல்களை நீந்துதல் முடியாது.' கரைகாணுது அவற்றுள்ளே யழுந்துவர்.

நாம் மனமொழி மெய்களால் கடவுளை வழிபட்டு நன்மை யடைதல்வேண்டும். அங்ஙன மில்லையேல் நாம் அரிதிற் பெற்ற அக் காணங்களால் யாது பயன்? 9. 'தன்வயத்தனுதல், தூய வுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை எனும் எண்வகைப் பட்ட குணங்களையுடைய கடவுளது தாள்களை வணங்காத தலைகளும், வாழ்த்தாத நாக்களும், தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்ளுதலில்லாத கண் முதலிய பொறிகளைப்போல, பயன்படுதலுடையனவல்ல.'

'ஆதலின் நாம் எப்பொருட்கும் இறைவனுகிய கடவுளை வழிபட்டு, துன்பத்திற் கேதுவாகிய பிறப்பைத் தவிர்த்துக்கொள்ளல்வேண்டும். 10. 'இறைவனது திருவடியென்னும் புணையைச் சேர்ந்தவர், பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர். அதனைச் சேராதவர் நீந்தமாட்டாராக அதனு ளழுந்துவார்' என்க.

இதுகாறும் கூறியவாற்றல், உலகத்திற்கு முதற்பொருளாகிய இறைவ னெருவன் உண்டென்பதும், கல்வியறிவிற்குப் பயன் அவனடியைத் தொழுது பிறவியறுத்த லென்பதும், இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவனெறி நிற்றலும் செய்தார் வீடு பெறுவரென்பதும், அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் செய்யாவழிக் குற்ற முண்டாமென்பதும், உலகியல்பை நினையாது இறைவனடியையே நினைப்பார்க்குப் பிறவியறுமென்பதும், அவ்வாறன்றி மாறி நினைப்பார்க்கு அஃதறாதென்பதும் பெறப்பட்டன.

---

9. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

10. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.

தமிழ் மருத்துவப் பெட்டி.

(பதார்த்தகுண சிந்தாமணி.)

வாழைப் பிஞ்சின் குணம்.

உதிரம் விழுகடுப்போ டுண்மூல ரத்தம்
எதிரில்விழு நீரிழிவு மேகும் — மதிநுதலே
பேழை வயிற்றுப்புண் பேருந் துவரார்ந்த
வாழைக்கச் சற்கு மருண்டு.

இ-ள். பிறையனைய நுதலாளே! துவர்க்கின்ற வாழைப் பிஞ்சுக்கு, இரத்தக் கடுப்பு, உள் வலய ரத்தமூலம், அதிமூத்திரம், வயிற்றுப் புண் இவை போகும் என்க.

பலாப் பிஞ்சின் குணம்.

தாகம்போம் வந்தபித்தஞ் சாந்தமா மாடவர்க்குப்
போக மிகப்பொழியும் பொய்யன்றே — மூக
வலஜமந்தங் குன்மமிவை யண்டிவருஞ் சொன்னோம்
கலசப் பலாப்பிஞ்சாற் காண்.

கலசம் – பால்.

இ-ள். பாலுள்ள பலாப்பிஞ்சால் தாகமும், பித்த நோயும் நீங்கும். சுக்கில விருத்தி, அடங்கிய சலம், மந்தாக்கினி, குன்மம் இவையுண்டா மென்க.

அத்திப் பிஞ்சின் குணம்.

மூலக் கிராணியறு மூலவிரத் தந்தீரும்
சாலக் கடுப்புந் தரிக்குமோ — மால்ரவத்
துத்திப் படவல்குற் றோகாய் துவர்ப்பையுறும்
அத்திச் சிறுபிஞ் சருந்து.

இ-ள். பாம்பின் படம்போன்ற அல்குலையுடைய மயில்போல்பவளே! துவர்ப்புச் சுவையுடைய அத்திப் பிஞ்சால் மூலவாயுக் கிரகணியும், இரத்தமூலமும், வயிற்றுக் கடுப்பும் விலகும் என்க.

முருங்கைப் பிஞ்சின் குணம்.

சிக்குருக்கு யப்பஞ்சத் திச்சுரத்திற் குஞ்சனிக்கும்
அக்குருக் குருப்ப மரோசிகட்கும் — சுக்கிலத்தின்
கொச்சை யுறவருந்திக் கூறுவற்கு மாமதனைப்
பச்சை யுறவருந்திப் பார்.

சிக்குரு – முருங்கை.

185

இ-ள். முருங்கையினது பூம் பிஞ்சைப் பாகஞ்செய்து தோலுடன் உண்ணில், அஸ்கிசுரம், எலும்பை யுருக்குகிற வெப்பம், அரோசகம், விந்து நஷ்டம் இவைகள் நீங்கும் என்க.

மாம்பிஞ்சின் குணம். இதுவே சூதப் பிஞ்சு.

கவைவாத பித்த கபமருசி வாந்தி
சுவைமறுத்த மந்தமெனுந் தோஷம் — இவையெல்லாம்
காதத்துக் கப்புறம்போங் கான மடமயிலே
சூதத்தின் புன்வடுவைத் துய்.

இ-ள். காட்டிற் சஞ்சரிக்கும் மயில்போன்றவளே! மாம்பிஞ்சை நீ தின்னக் கடவாய். தின்றால் கிளைத்த வாத முதலிய முத் தோஷங்கள், அரோசகம், சர்த்தி, அக்கினிமந்தம் இவை போம் என்க.

நாரத்தங் கச்சலின் குணம். இதுவே போஜன கஸ்தூரி.

அன்னமிகுஞ் சீத மருசியுப்பி சங்கிருமி
மன்னுமோ விந்துவுடன் வன்பசியாம் — வன்னமலர்
வாசமே றுங்குழலீர் மாநோய் தனிலுண்ணும்
போசனகஸ் தூரிக்குப் பூ.

இ-ள். மலர் வாசனையேறிய கூந்தலையுடையவளே! உலகில் சுரரோகிகளும் உண்ணுகின்ற நாரத்தங் கச்சலால் சீதளம், அரோசகம், வயிற்றுப் பொருமல், எரி கிருமி இவை நிலைக்காவாம். சுக்கில தாதுவும் தீபாக்கினியும் உண்டாம். உணவை மிகுதியாக உட்செலுத்தும் என்க.

மாதுளம் பிஞ்சின் குணம்.

மலக்கழிச்சல் சீதத்தால் வந்த கழிச்சல்
சலக்கழிச்சல் சோரியாற் சாரும் — பலகழிச்சல்
மாளும் புளிப்பான மாதுளம்பிஞ் சாலயிலை
யாளுங்கண் மாதே யறி.

இ-ள். வேல்போலுங் கண்ணையுடைய பெண்ணே! புளிமாதுளம் பிஞ்சால், மலம், சீதம், சலம், இரத்தம் இவைகளின் கிறமாக ஆகின்ற பற்பல அதிசார ரோகங்கள் நீங்கும் என்க.

முகிழ் விரியாக் கத்திரிப் பிஞ்சின் குணம்.

அனலுடனே பித்த மகலு மலம்போம்
தொனியுண்டா மையர் தொலையும் — சனியாத
முத்திருக்கும் வெண்ணகையீர் மூடு முகிழ்விரியாக்
கத்திரிப்பிஞ் சுண்பவர்க்குக் காண்.

இ-ள். முத்துப்போலும் வெள்ளிய பற்களையுடையவளே! முகிழ் விரியாத கத்திரிப் பிஞ்சுக்கு, சுரமும், பித்த தோஷமும், கபமும் நீங்கும். மலம் இளகி யிறங்கும். குரல் தொனி பலக்கும் என்க.

அவரைப் பிஞ்சின் குணம்.

(தேரையர்.)

கங்குலுண விற்குங் கறிக்கு முறைகளுக்கும்
பொங்குதிரி தோடத்தோர் புண்சுரத்தோர் — தங்களுக்கும்
கண்முதிரைப் பில்லநோய்க் காருக்குங் காழுறையா
வெண்முதிரைப் பிஞ்சாம் விதி.

உறை - மருந்து. காழ் - விதை. முதிரை - அவரை.

இ-ள். விதை முதிராத வெள்ளையவரைப் பிஞ்சு, இராப் போசனத்திற்கும், மருந்துண்பவர்க்கும், வாதாதி முத்தோஷம், விரணம், சுரம், விழிக்குள் முதிர்ந்த சிலேஷ்மபில்லம் முதலிய ரோகிகளுக்கும் ஆகும் என்க.

ஓர் மருத்துவன்.

கண்மணி கமலா.

நீதிபுகட்டும் ஓர் இனிய தமிழ் நாவல்.

(வெண்டாமரை ௬, இதழ் எ, 137-ம் பக்கத் தொடர்ச்சி.)

— கந்தசாமி ஐயரவாள்! முதலில் உம்மை யொரு கேள்வி கேட்கவேண்டும். உமது அருமைப் புதல்வி சதாசிவ சாஸ்திரிகளுக்கு மணமகளானால் எனக்குச் சேரவேண்டியது ஞாபகமிருக்கிறதோ?

— இந்தக் கேள்வியும் கேட்கவேண்டுமோ? என்னைக் 'கைமேற் றுட்டு' என்பார்களே, அது உமக்குத் தெரியாதா? முகூர்த்தத்திற்கு முந்தியே நூறுவராகனும் ஒரு ஜோடி சரிகை வேஷ்டியும் உமது கையில் இருப்பதாக நிச்சயமாக எண்ணிக்கொள்ளும்.

— சரி, மிக்க சந்தோஷம். இனி அதைக்குறித்து நான் ஒன்றும் பேசவில்லை. முதலாவது நானெடுத்துக்கொண்ட பிரயாசையினாலும் இரண்டாவது ஈசுவர கிருபையினாலும் போனகாரியம் அநுகூலமாய்

முடிந்துவிட்டது. அப்பப்பா என்ன பிரயாசை! என்ன கஷ்டம்! என்னென்ன தந்திரங்களையெல்லாம் கையாடவேண்டியிருந்தது. அதையெல்லாம் இங்கே விவரித்துக் கூறவேண்டுமானால் ஒரு பாரத கதையாய் விடும். சொல்லி முடிக்க ஒருமாதம்கூடப் போதாது.

கடைசியாய்க் காரியம் சித்தியாய்விட்டது. சதாசிவ சாஸ்திரி இந்த விவாகத்திற்குத் தம் சம்மதத்தையும் உறுதி வாக்கையும் கொடுத்துவிட்டார். அவர் இந்தக் கலிகாலத்தில் தப்பிப் பிறந்த சத்தியவான். கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதித்தாலும் சொன்ன வாக்குத் தவறமாட்டார். இந்த மகானை நீங்கள் மருமகனாகவும், சிவகாமி மணமகனாகவும் பெறுதற்கு எத்தனை ஜென்மத்தில் என்னென்ன தவங்கள் செய்தீர்களோ அறியேன். ஆனால் இந்த விவாக விஷயம் முகூர்த்தநாள் வரையில் வெகு ரகசியமாக இருக்கவேண்டும். சாஸ்திரிகளோ வைதீகம் பழுத்த வேதியர். இக் கால அநாகரிகங்களும் அநாசாரங்களும் அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. நீங்கள் சாப்பாட்டுகிளப் வைத்திருப்பது மாத்திரம் அவருக்குத் தெரியவந்தால் அது ஒன்றே உங்கள் சம்பந்தத்தை நிக்கிரகித்துவிடுவதற்குப் போதுமாயிருக்கும். இவை யெல்லாம் தீர்க்காலோசனைசெய்தே தக்க ஏற்பாடுகள் செய்துவந்திருக்கிறேன். முகூர்த்த தினம் வரையில் இவ் விவாக விஷயம் ஒருவருக்கும் தெரியக்கூடாது. இந்த மாதத்திலேயே சுபதினம் பார்த்துக் காரியத்தை நிறைவேற்றி விடுவோம்.

என்று சொல்லிவிட்டு அதுமுதல் திருவதிகையிலும் திருப்பாதிரிப்புலியூரிலும் முகூர்த்தத்திற்கு வேண்டிய சகல பிரயத்தனங்களும் எடுத்துக்கொண்டு ஒருவித இடையூறும் நேராதபடி நொண்டி சுப்பையன் செய்துவந்தான்.

ஜாதகபேதமேதேனு மிருந்தால் விவாகம் நடைபெறாதே யென்ற அச்சத்தினால் கந்தசாமி ஐயரிடமிருந்து பெற்றுக்கொண்ட பெண் ஜாதகத்தை மறைத்துவிட்டுச் சதாசிவ சாஸ்திரிகள் ஜாதகத்திற்குப் பூரணப் பொருத்தமான பெண் ஜாதக மொன்றை ஒரு சோதிடனால் கணிக்கச் செய்து அதைச் சாஸ்திரிகளுக் கனுப்பி அவர் மனதையும் திருப்திசெய்துவிட்டான்.

முகூர்த்ததினத்தன்று பொழுது புலர்வதற்கு முந்தியே தனக்குச் சேரவேண்டிய தரகு ரூபாய் நூறு வராகனையும் கந்தசாமி ஐயரிடமிருந்து பெற்றுக்கொண்டு மடியி லிறுக்கிப் பதனப்படுத்திக்கொண்டான். தனக்கு அவர் வெகுமதியாகக் கொடுத்த நாலு அங்குல சரிகைக்

கரையில் யானை ஒட்டை முதலிய சித்திரங்க ளமைந்த பன்னிரண்டை அரையில் இலக்ஷணமாகக் கட்டிக்கொண்டும் ஒரு முழச் சரிகை முன்றானையுள்ள ஆறை அலங்காரமாகத் தோள்மீது அணிந்துகொண்டும் தெருவாயிலில் வந்து எட்டி யெட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான். ஏனென்றால், தன் காரியம் முடிந்துவிட்டவுடனே இனி அங்கே தாமதிக்க இஷ்டமில்லாதவனாய்த் திருவதிகை விட்டுத் தக்க காரணங் காட்டிப் போய்விடுவதற்காக மதுரையி லிருக்கும் தன் நண்ப னொருவனால் தனக்கு ஒரு அவசரத் தந்தி யனுப்பிவைக்கும்படி ஏற்பாடு செய்திருந்தான்.

முகூர்த்தத்திற்கு ஒரு நாழிகைக்கு முந்தி அந்தக் தந்தி சமாசாரம் அவனுக்குக் கிடைத்தது. அதில் வரைந்திருந்த தென்னவென்றால்,

“மதுரை தியாகராஜய்யர்.

திருவதிகை நடேச சாஸ்திரிகள் வீட்டில் சுப்பையருக்கு.

இராத்திரி உமது தாயார் சிவபதம் அடைந்தாள். உடனே புறப்பட்டு வரவும்.”

எதார்த்தத்தில் நொண்டி சுப்பையன் தாயார் காலஞ்சென்று இருபது வருடங்களுக்கு மேலாய்விட்டது. ஆனால் தனக்கு அவசரம் நேரிடும்போதெல்லாம் தன் தாயார் இறந்துவிட்டதாகக் காரணம் தேடிக் கொள்வது அவனுக்கு வழக்கம்.

இந்தத் தந்திக் காகிதத்தைக் கையி லெடுத்துக்கொண்டு அழுத கண்ணுஞ் சிந்தின மூக்குமாகச் சதாசிவ சாஸ்திரிகளையும் கந்தசாமி ஐயரையும் கண்டு அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு ரெயிலுக்குச் சென்றான்.

கையில் பெருத்த தொகை கிடைத்தவுடன் நொண்டி சுப்பையனுக்கு, தான் சில நாளாகக் காணாத தாசி குப்பியைப் போய்க் காண வேண்டுமென்னும் மட்டில்லாத ஆசை பிறந்தது. விழுப்புரத்திற்கு ரெயிலேறித் தாசி வீட்டிற்கு நேராகச் சென்றான். சுப்பையன் விசித்திர வேஷ்டிகளையும் அவன் மடியில் கனத்தையும் கண்டவுடன் விலைமகள் விசேஷ மரியாதையும் அன்பும் பாராட்டி வரவேற்றாள். இரத்தினக் கம்பளத் தாசனத் திருத்திச் சந்தனாதி பரிமளத் திரவியங்க ளுதவி, மயில் சிவிறிகொண்டு விசிறி, பாகடை மடித்துக்கொடுத்து ஒருநாளுஞ் செய்யாத உபசாரங்களெல்லாம் ஒருங்கே செய்தாள். இரண்டு மாதமாகத் தன் உயிர்க்காதலனைக் காணாததினால் தனக்குற்ற துயரையும் கவலையை

யும் விஸ்தரித்துக் கூறி, இன்னும் சிலநாள் அவர் வரத் தாமதித்தால் தனக்குத் தற்கொலையோ அல்லது பைத்தியமோ நேருமென்று தன் குல தெய்வத்தின்மீது சத்தியஞ்செய்து சொன்னாள்.

— அடீ என் மனதைக் கொள்ளைகொண்ட மனோகரியே! நேச விசுவாசக் குப்பு சுந்தரமே!! உனக்காகத்தானே நான் இத்தனைநாள் அலைந்து திரிந்தேன். என்னோடு சல்லாபமாகக் காசியாத்திரை செய்ய வேண்டுமென்று எத்தனையோவிசை உன் அபேக்ஷையைத் தெரிவித்திருக்கின்றாய். உன் மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்வதற்காகவே இத்தனை நாளாகப் பொருள் தேடித் திரிந்தேன். இதோ பார், நாம் யாத்திரை செய்வதற்கு வேண்டிய ரொக்கம் சம்பாதித்து வந்திருக்கிறேனென்று சுப்பையன் சப்திக்கும்படி தன் மடியைத் தட்டிக் காட்டினான்.

— ஆ! என் பிராணநாயகா! என் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக இத்தனை பிரயத்தனம் செய்துவந்தீரே. உமது அன்பே அன்பு! காசிக்குப்போனால் விசித்திரமான பெனாரெஸ் சரிகைச்சேலை வாங்கிக் கொடுப்பதாக வாக்களித்தது ஞாபகத்தி லிருக்கிறதா? சுகமாகப் பிரயாணம் செய்வதற்கு வேண்டிய ரொக்கம் இருக்கிறதா என்று சொல்லிக்கொண்டே தாசி குப்பி சுப்பையன் மடியில் கையை வைத்தாள்.

வைத்த கையை மெதுவாக அகற்றிவிட்டு ஏராளமாக இருக்கிறது. பயணத்திற்கு விரைவில் ஆயத்தப்படு என்றான் நொண்டிப் பார்ப்பான்.

இவ்வாறாகக் காசி யாத்திரை தீர்மானிக்கப்பட்டது. சகலவித ஆயத்தங்களும் தாமதமின்றிச் செய்யப்பட்டன. அன்றைய ராத்திரி கல்கத்தா தரூமெயிலில் நொண்டி சுப்பையனும் தாசி குப்பியும் பிரயாணப்பட்டுவிட்டார்கள்

ரெயில்வண்டியின் ஜன்னலருகில் விசிப்பலகையில் ஒருவருக்கொருவர் எதிர்முகமாக உட்கார்ந்துகொண்டும் உல்லாசமாகத் தாம்பூலம் தரித்துக்கொண்டும் சல்லாபமாகச் சம்பாஷித்துக்கொண்டும் வெகுதூரம் வரையில் சந்தோஷமாகப் பிரயாணம் செய்தார்கள்.

சூரியன்- அஸ்தமித்துப் பத்துமணிக்குமேலிருக்கும். மழை எதேஷ்டமாக வருஷித்துக்கொண்டிருந்தது. வண்டியின் முதுகு சட்டத்தில் சாய்ந்துகொண்டு நித்திரை மயக்கத்திலிருந்த சுப்பையனைத் தட்டியெழுப்பி, "காசியில் எனக்கு எவ்வளவு விலையில் சேலை யெடுத்துக் கொடுக்க இருக்கிறீர்கள்" என்றாள் தாசி.

— இதைக் கேட்கிறதற்குத்தானா நித்திரை பங்கம்செய்கிறது? அவசரப்படாதே. நல்லதாகப் பார்த்து வாங்கிக்கொடுக்கிறேனென்று தூங்கிவிழுந்துகொண்டே சுப்பையன் சொன்னான்.

— இப்படி வழவழவென்று சொன்னால் போதாது. போனமாதத்தில் எம்ப்ரெஸ் அம்மாக்கண்ணுக்கு, க. வி. ப. ம. சி. கம்பெனி நாட்டுக்கோட்டைச் செட்டிமகன் ஆயிரம் வராகனுக்கு ஒரு சேலை வாங்கிக்கொடுத்தானாம். அதன் கரைகளிலும் முன்றானையிலும் ஆணிமுத்துப் பதித்திருக்கிறதாம். அதைப் பார்த்த கண்ணும் பூத்துப்போகிறதாம்.

தஞ்சாவூர் நவநீதத்துக்கு ஒலக்கூர் ஜமீன்தார் புத்திரன் போன மாதத்தில் கொடுத்த சேலை தங்கமயமாகவே ஜொலித்துக்கொண்டிருக்கிறதாம்.

விழுப்புரத்தில் என் விரோதி ரூபாவதி கீழையூர் ரெட்டி இருநூறு வராகனுக்கு வாங்கிக்கொடுத்த மேகவர்ணச் சேலையைக் கார்த்திகைத் தீபத்தின்போது கட்டிக்கொண்டுவந்தாள். அது கண்டது முதல் அவ்வித சேலையின்மீதே எனக்குப் பயித்தியமாயிருக்கிறது. கனவும் காண்கிறேன். இருநூறு வராகனுக்குக் குறைந்ததாக இருந்தால் நான் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்றாள் விலைமகள்.

— என்னடி குப்பு! வேசைக்குக் காசிலே கண்ணென்பதற்குச் சரியாக ஒருநாழிகையாக என் நித்திரையையுங் கெடுத்துச்சேலைப்பேச்சும் பணப்பேச்சுமாகவே பேசிக்கொண்டிருக்கிறாய். நூறு வராகன் இருநூறு வராகனென்றால் கொல்லையில் மாத்திலா காய்த்துத் தொங்குகிறது. ஏனடி வீணாக மனக்கோட்டை கட்டுகிறாய் என்று துவேஷமாகக் கூறிக் கையை விசிறினான் சுப்பையன்.

விசிறிய கை தாசியின் முகத்தில் பலமாகத் தாக்கியது, உடனே தாசிக்குக் கடுங்கோபம் பிறந்தது.

ஐயையோ! மதிகெட்டுப்போனேனே. மண் குதிரையை நம்பி ஆற்றி லிறங்கியதைப்போல இந்த நொண்டிப் பார்ப்பானை நம்பிவந்ததற்கு நடுவழியில் துரோகம் செய்கிறானே. காசேது பணமேது என்பதுடன் தாசியென்றும் வேசியென்றும் வைது முகத்திலும் அறைந்தானே. என்று உரத்தசப்தத்துடன் புலம்பிக்கொண்டே சுப்பையன் தாடையில் ஓங்கி ஒரு அடி யடித்தாள். அடி பலமாகப் பட்டது. உடலெல்லாம் நடுங்கக் கண்ணிற் பொறிபறக்கக் கோபாவேசங்கொண்டவனாய், "அடி தூர்த்தை! கசுமால வேசி! என்னை அடிக்கவும் மனதில் துணிவு வந்ததா? உனது நெஞ்சு இரும்பா" என்று சுப்பையன் கர்ச்சித்துக்கொண்டே

யெழுந்து தாசி கூந்தலைச் சிக்கெனப் பிடித்தான். கை கூந்தலில் சிக்கிக்கொண்டது. சிக்கிக்கொண்ட கையை இழுக்க இழுக்க எத்தனையோ வருடங்களாய்க் கழற்ற இயலாமல் போட்டிருந்த சுப்பையன் மோதிரத்தில் இன்னும் பலமாகச் சிக்கிக்கொண்டது.

வண்டியிலிருந்த பிரயாணிகளில் சிலர் "ஐயோ பாவம்! பாதகி நன்றாய் அறைந்துவிட்டாள். பிராமணன் கன்னம் வீங்கிவிட்டது" என்று அநுதாபப்பட்டார்கள். வேறு சிலர், பேஷ்! பேஷ்! நல்ல வேடிக்கை! நாடகத்திற்குப் போகவேண்டியதில்லையென்று சொல்லிக்கொண்டு கலகலவெனச் சிரித்தார்கள். மற்றும் சிலர், "சுவாமி! கையை மேலே தூக்கி மடக்கிக்கொண்டு கீழே இழுங்கள்" என்று சிக்கிக்கொண்ட கையை மீட்டுக்கொள்ள உபாயம் சொல்லிக்கொடுத்தார்கள்.

இப்படி யிருக்கையில், பிரளயகாலத்து இடிகளெல்லாம் ஒன்று சேர்ந்து குமுறினாற்போல ஒரு பயங்கரமான சப்தம் கேட்டது. பெஜவாடாவுக் கருகில் கிருஷ்ணாநதியின்மீதிருந்த இரும்புப் பாலம் சில நிமிஷங்களுக்கு முந்தி வெள்ளப் பெருக்கால் உடைபட்டுப்போனதினால் வண்டித்தொடரின் பெரும்பாகம் பயங்கர சப்தத்துடன் தடதடவென்று இமைப்பொழுதில் ஆற்றில் விழுந்தது.

சன்னலருகில் போராடி நின்றுகொண்டிருந்த சுப்பையனும் தாசியும் வண்டி தலைகீழாகச் சாய்ந்து விழும்போது வண்டி விழுவதற்குமுன் தீவிரமாக ஆற்றில் தள்ளப்பட்டார்கள். அப்போதுகூட, சிக்கிக்கொண்ட கை கூந்தலைவிட்டு விலகாததினால் இருவரும் ஒருவரை யொருவர் பிணைத்துக்கொண்டே விழுந்தார்கள்.

ஆற்றில் அணைகடந்த வெள்ளம் பிரவகித்துக்கொண்டிருந்தபோதிலும் கரை சற்று அருகேயிருந்ததினால் சுப்பையன் தனியேயிருந்தால் கொஞ்சம் நீந்தத் தெரிந்தவனாதலால் நீந்திப் பிழைத்திருப்பான். ஆனால் கூந்தலில் சிக்கிய கையை விலக்கிக்கொள்ள முடியவில்லை. குப்பியும் அவன் தன்னை உதைத்துத் தள்ளத்தள்ள இந்தப் பிராணாபத்தில் தன்னையுமீறி அவனையே வந்து வந்து கட்டிக்கொண்டாள். இவ்வாறாகக் கால் நாழிகை வரையில் இருவரும் போராடிக்கொண்டே ஜலத்தில் மூழ்கி உயிரிழந்தார்கள்.

ஸூரியோதயத்தில் இருவர் பிணமும் உடைபட்ட பாலத்திற்குக் கூப்பிடு தூரத்தில் ஒன்றோடொன்று கட்டிக்கொண்டபடியே ஆற்றோரத்தில் ஒதுங்கிக்கிடந்தன.

பெஜவாடா ரெயில் பாலத்தின் இந்தப் பயங்கரமான விபத்து இந்தியா முழுவதையும் துக்கசாகரத்தில் அமிழ்த்தியது. நூற்றுக் கணக்

கான பிரயாணிகள் வண்டியில் நசுக்குண்டும் ஆற்றில் மூழ்கியும் உயிரிழந்தார்கள். பந்துக்களையும் சிநேகிதர்களையும் இவ்வாறு இழந்த கணக்கில்லாத ஜனங்களின் அழுகைக் குரல் சென்னை ராஜதானியில் எப் பக்கத்திலும் எதிரொலித்தது.

இந்த விபத்தைச்சார்ந்த விஷயங்களையெல்லாம் சரியாகவும் விவரமாகவும் அறியும்பொருட்டு முக்கிய பத்திரிகைகளெல்லாம் பிரத்தியேக லிகிதர்களை அது நிகழ்ந்த இடத்திற்கு அனுப்பிவைத்தன.

சென்னையில் பிரசுரமாகும் 'ஆரிய மித்திரன்' என்னும் தினசரிப் பத்திரிகையின் லிகிதர் இராதா கிருஷ்ணய்யர் தமது பத்திரிகையில் கிருஷ்ணா நதியின் பால விபத்தைக் குறித்து எழுதிய லிகிதத்தில் பின் வருமாறு வரைந்திருக்கிறார்.

“ஒரு பிராமணரின் தைரியமும் பரோபகாரமும்.

பயங்கரத்தையும் பரிதாபத்தையும் விளக்கும் இத்தனை காட்சிகளின் மத்தியில் ஒரு அற்புத செயலைக் கண்டோம்.

ஒரு ஸ்திரீயின் உயிரைக் காப்பாற்றும்பொருட்டு ஒரு பிராம்மணர் உயிரிழந்திருக்கின்றார். இவ் வுத்தமருக்கு நாற்பத்து நாற்பத்தைந்து வயதிருக்கும். அவர் புனைந்திருக்கும் வஸ்திரங்களினாலும் மடியிலிருந்த ரொக்கத்தினாலும் தனவந்தராகக் காணப்படுகிறார். காய மொன்றின்றி ஆற்றில் விழுந்தவர் நீந்திக் கரையேறும் சமயம் வெள்ளத்திலடித்துக் கொண்டுபோகும் ஒரு பெண்ணின் உயிரைக் காப்பாற்ற முயன்றவராகக் காணப்படுகிறார். அந்த ஸ்திரீயின் கூந்தலை எவ்வளவு சாதுரியமாகப் பிடித்திருக்கிறாரென்றால் அதில் சிக்கிய கை இருவரும் இறந்து பிரேதம் கரையிலொதுங்கியபோதும் விடுபடவில்லை.

ஆகவே பரோபகாரமே இவர் மரணத்திற்குக் காரணம். அந்த ஸ்திரீயும் இவருக்கு ஒருவித சம்பந்தமுள்ளவ ளல்லள். அவளணிந்திருக்கும் ஆடையாபரணங்களால் அவள் உயர்குலச் சூத்திர ஸ்திரீயாகத் தோன்றுகின்றாள்.

ஒரு சூத்திர ஸ்திரீயைக் காப்பாற்றும்பொருட்டுத் தன் பிராணனைத் திரணமாக மதித்து உயிர்பரித்யாகம்செய்த இவ் வுத்தம பிராமணரின் பரக்ஷேம இச்சை எத்தனை மெச்சத்தக்கது. பார்ப்பார்கள் சுயநலமே பார்ப்பார்கள் என்று பிதற்றித் திரியும் பித்தர்கள் இத்தகைய பரோபகாரச் செயல்களைக் கண்டாவது மனந் தெளிவார்களாக.”

(வரும்.)

தம்பி – புருஷோத்தமன்.

ஓர் செய்யுட்பொருள் விளக்கம்.

(பிரபுலிங்கலீலை, முனிவர்கதி, 17-வது செய்யுள்.)

"ஞானங் கொண்டு நணுகுஞ் சிவபதம்
ஊனங் கொண்ட கருமத் துறுவது
வானங் கொண்டு வளர்த்தல் புகையநு
மானங் கொண்டு வளர்த்தலை யொக்குமால்."

இ-ள். ஞானம் கொண்டு நணுகும் சிவபதம் — ஞானசாதனங் கொண்டே அடைதற்பாலதாய முத்தியாகிய சிவைக்கியம்,— ஊனம் கொண்ட கருமத்து உறுவது — (மாயாகாரியமாகிய கருவி கரணங்களாற் செய்யப்படுதலிற்) குற்றம் பொருந்திய (மறையோதல் மகம் வளர்த்தல் பூசையாற்றல் யோகுழத்தல் முதலிய) கருமங்களினாலே பெறக்கருதுவது,— வான் அம் கொண்டு வளர்த்தல் — மழை பெய்தலாற் பெறும் நீரைச் சாதனமாகக் கொண்டு வளர்த்தற்குரிய பைங்கூழை,— புகை அநுமானங் கொண்டு வளர்த்தலை ஒக்கும் — புகையாகிய காட்சி வாயிலானே கருதப்படும் அக்கினியைச் சாதனமாகக் கொண்டு வளர்க்குஞ் செயலை நிகர்க்கும் என்பதாம். எனவே கருமத்தான் முத்தி சித்தியாதென்பது பெறப்பட்டது.

இதனானே மேல் வாழ்த்தினாற் கூறப்படும் சிவகருமங்கள் போலியாய் முடியும் போலுமெனின், முடியாது. வருஞ் செய்யுள்களில் அற்பபயனுடைத்தென்பதனானும் சரியையாதி யாற்றி வீரசைவஞ் சார்ந்தென்பதனானும் சிவபதமடைதற்குரிய ஞானமுண்டாவதற் கேதுவாதன் முகத்தாற் பயனுடைத்தா மென்க.

வளர்த்தல் — பயிருக்குத் தொழிலாகுபெயர்; வற்றல்போல.

புகையாகிய அநுமானத்தையுடைய அங்கி யென்பது — பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. அநு — கூட;— மானம் — பிரமாணம்; அநுமானம் — கூட நிகழும் பிரமாணம். ஆல் — அசை. இவ்வுவமை அசம்பாவிதப் பொருட்டருதலினாலே கூடாவுவமையணி. உறுவது — எழுவாய், ஒக்கும் — பயனிலை, வளர்த்தலை என்பது செயப்படுபொருள்.

ந. கண்ணுச்சாமிப்பிள்ளை,
உபாத்தியாயர்,
சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை.

தமிழர் கடமை.

(வெண்டாமரை ரு, இதழ் ச, 85-ம் பக்கத் தொடர்ச்சி.)

பின்னுமவர்கள் சீவராசிகளுக் கன்றிச் சராசரங்களிடத்துங் கருணை பூண்டு தம் ஈகைத் திறனை விளக்கியுள்ளார் என்பன.

வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
வருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க னாடன் பேகனுஞ் சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரியுங் கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையக மருள
வீர நன்மொழி யிரவலர்க் கீந்த
வழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேற்
கழறொடித் தடக்கைக் காரியு நிழறிகழ்
நீல நாக நல்கிய கலிங்க
மாலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோ
ளார்வ நன்மொழி யாயு மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த
வுரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவே
லரவக்கடற் றானை யதிகனுங் கரவாது
நட்டோ ருவப்ப நடைப்பரி கார
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாட னள்ளியு நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரை காரியொடு மலைந்த
வோரிக் குதிரை யோரியு மெனவாங்
கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோ

ளெழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
வொருதான் றாங்கிய வுரனுடை நோன்றாள்
ஓவியர் பெருமகன்

எனுஞ் சிறுபாணாற்றுப் படையிற் கூறியவாறு பல வள்ளல்களையும் தோற்றுவித்துள்ளது. அங்ஙன மாய வள்ளல்களை இக்காலத்துக் காணாத வாறு மறைத்தது நாம் நம் மொழியிடத்துக் காட்டிய குறையேயன்றோ? ஆதலின் தமிழரெனக் கூற வெட்காதவ ரெவரும் முன்னோர்போன்று ஒளி, அளி, பொறை, நிறை, அறிவு முதலிய குணங்கள் நிறைபெற விரும்பின், பிறிது நினைவற்று உலகத்தை யன்பிற் குரித்தாக்கிக் கடவுட் பேணி நல்வழி யடைவர். அப்பொழுதே நாமும் தமிழரெனக் கூறுதற்கு அருகராவோம்.

குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு காமுற
வாய்மைவாய் மடுத்து மாந்தித் தூய்மையிற்
காதலின் பத்துத் தூங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்கா றின்மை யவாவின் மையென
விருபெரு நிதியமு மொருதா மீட்டுந்
தோலா நாவின் மேலோர் பேரவை
யுடனம ரிருக்கை யொருநாட் பெறுமெனிற்
பெறுகதி லம்ம யாமே வரன்முறைத்
தோன்றுவழித் தோன்றுவழிப் புலவும் பொதிந்து
நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்பவிம்
மலர்தலை யுலகத்துக் கொட்கும் பிறப்பே

என்னும் அறிஞருரை வாய்வன்மையினின்றும் வாய்மையாய் மாறும் உலக வொற்றுமை கருதி யுழைக்கும் பெருஞ் சபைகளையும் வேறு கருத விடுக்கும்

கு. ப. அ. க. சதாசிவம்பிள்ளை,

அம்மணூர்.

படிக்காசுப்புலவர் சரிதம்

(வெண்டாமரை ரு, இதழ் எ. 148-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வளவே படிக்காசுப்புலவர் வரலாறாகத் தெரிந்தவை. இச் சரிதங்களால் இப் புலவர், தெய்வப்புலமை வாய்ந்த பெரியாரில் ஒருவரென்பதும், சிவபிரானருள் சிறக்கப்பெற்றவரென்பதும், கலைமகளார் கருணைகடாக்ஷம் கைவரப்பெற்ற திவ்வியப்புலவரென்பதும், துறவறமடைந்து ஞானசமாதி கூடி ஏகாந்தத்தின் இனிமையுணர்ந்த ஞானசம்பன்னரென்பதும், சந்தம் பாடுவதில் நிகரற்ற திறமை வகித்த சரசகவியென்பதும், கடவுளிணையடிகளில் இடையறாத பக்தி செலுத்தி அவன் இன்னருள் பெறுதலே சிறந்த பேறெனக் கருதும் இயல்புடையவரென்பதும், சபாநாயகர் இவர் பாடுந்தோறும் இவர் பாடலுக்குவந்து பரிசாகப் பஞ்சாக்ஷரப்படிமிசைப் பொற்காசு வைத்தருளப்பெற்ற மகானென்பதும், மற்றும் இவரது உத்தமகுண விசேடங்களும் நன்கு விளங்கும். இவர்க்கு வழங்கிய "படிக்காசுத் தம்பிரான்" "படிக்காசுப்புலவர்" என்பன இவரது பாடலுக்குப் பரமன் மகிழ்ந்து பொற்காசளிக்கப்பெற்ற விசேடத்தால் எழுந்த காரணப்பெயராகும். இப் புலவர் பெருமானைப் படைத்த நந்தமிழகத்தின் பெருமையை என்னென்று இயம்புவது!

இப் புலவர்பெருந்தகை பாடியனவர்க மேலே குறித்த பாடல்களில், "எல்லப்ப னம்மையப்பன்" "ஓர்கருப்பு மில்லாத" "காவை வென்றிடு" என்பவைகள் சொக்கநாதப்புலவர் பாடியவைகளாகவும், "பெற்று ளொருபிள்ளை யென்மனையாட்டி" "வழிமேல் விழிவைத்து வாடாமல்" எனப் பாடிய "துறுங்துடி நம்பி" வாக்கை இவரதாகவும், "மட்டாருந் தென்களந்தை" எனப் படிக்காசுப்புலவரைப் புகழ்ந்த கும்பன் வாக்கு மேற்குறித்த சொக்கநாதப்புலவர் பாடியதாகவும் கூறப்படுகின்றன. இச் சரிதங்களில் இருந்த பல பாடபேதங்களும், மாறுபாடுகளும் ஒருவாறு பரிகரிக்கப்பட்டுள்ளன.

இனி இப் புலவர் பெருமான் காலம் இன்னதென்பதை ஆராய்வாம்:— "மால் சீதக்காதி" "வேள் சீதக்காதி" "துரை சீதக்காதி" என மகம்மதிய வள்ளல் சீதக்காதியைப் புகழ்ந்தும், "பூச்சக்ர மன்னர்பணி ரகுநாத சேதுபதி" "சேது ரகுநாத சிங்கமே" "புகழ்செய் தளவாய் குமாரன்" என ராமநாத மன்னரைச் சிறப்பித்தும் இவர் பாடுவதால், இவர் இற்றைக்கு 267 வருடங்கட்கு முற்பட்டவரெனத் தெரிகிறது. இப் புலவர் புகழ்ந்தெழுதிய சீட்டுக்கவியிற் கண்ட ரகுநாத சேதுபதியென்பது சேதுபதிகள் பலர் புனைந்த பெயராயினும், கி. பி. 1647 முதல்

1672 வரை சேதுநாட்டை மிக்க திறமையுடன் ஆட்சிசெய்தவரும், புலவர்க்குப் பெருநிதியாய் விளங்கியவருமாகிய திருமலைச் சேதுபதியாம் ரகுநாத சேதுபதியைக் குறிக்கின்றதாகவே தோற்றுகிறது. இந்தத் திருமலைச் சேதுபதிபேரிற்றான் பொன்னுங்கால் அமிர்தகவிராயர் என்பவர், ஒருதுறைக் கோவை பாடிப் பதினுயிரம் பொன் பரிசுபெற்றது. இது, "கோவைத் துறைக்குப் பதினு யிரம்பொன் கொடுத்திசைகோள், தேவைத் துறைக்குத் துரை ரகுநாதன்" என அக் கவிராயர் பாடியதனுலே அறியத்தக்கது. இவ் வொருதுறைக்கோவை கொண்டவர் இவரேயென்பதும், தளவாய் சேதுபதி புதல்வர், தமிழிற் செய்யுள் செய்தலினும் வல்லவர் என்பதும், அக் கோவையில், "தளவாய் குமாரன்" "காத்துங் கருணையுங் கல்வியும் வாழ்வுங் கவிமதுர, வாக்குந் தழைத்த ரகுநாதன்" எனவும் கூறுமாற்ருன் உணரப்படும்.

இக் காரணங்களால் இப் புலவர் பெருமான் இற்றைக்கு 270 வருடங்களுக்கு முன் விளங்கியவரென்றே கொள்ளலாம்.

இனி, இவர் பாடலுட் பயின்ற அரசர்கள், பிரபுக்கள், புலவர்கள் முதலினேர் இன்னுரென இவர் சரிதத்தில் மேல் விளங்கிற்றெனினும், அவற்றை இங்குப் பெயர் வரிசையாற் கூறி இவர் சமகாலத்துப் புலவர் இன்னின்னர் என விளக்கி இப் புலவர் பாடிய பிரபந்தங்கள் இன்ன என்பதும், அவற்றைப்பற்றிய இரண்டொரு குறிப்புங் கூறி இச் சரிதத்தை முடிப்பாம்.

இவரை ஆதரித்த அரசர்கள், பிரபுக்கள்.

இராமநாதபுரம் இரகுநாத சேதுபதி, சிவகங்கைத் திருமலைத் தேவர், அரியலூர் லட்சுமண ரங்க மழவேந்திரன், மகாபலிபுரம் சிவந்தான் மல்லையன், காளத்தியப்பர். இவர்களுள் செவந்தான் மல்லையனேயும் காளத்தியப்பரையும் பற்றிய விபரம் தெரியக்கூடவில்லை.

பிரபுக்கள்.

மாவண்ரேர் கறுப்ப முதலியார், மோரூர் குமாரசாமிக் காங்கேயர், கிழக்கரை சீதக்காதி, மாக்தைக்குடி மகாசனத் தலைவர்.

புலவர்கள்.

திருவாரூர் இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர், குடமூக்குக் தம்பன், கொங்குநாட்டு மசக்காளிப் புலவன்.

இவர் சரிதத்துள் வாராத சமகாலப் புலவர்கள்.

ஒருதுறைக் கோவை பாடிய சிவகங்கை சமஸ்தானத்தைச்சேர்ந்த பொன்னுங்கால் அமிர்தகவிராயர், சண்பக நல்லூர்ச் சிவபெருமான்மீது

வண்டுவிடுதூது பாடிய பலபட்டடைச் சொக்கநாதப்புலவர், ஊர் விளங்காத மற்றொரு சொக்கநாதப்புலவர், பகதாது முகையித்தீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ் பாடிய பாண்டிநாட்டுள்ள எமனேசுரம் சவாதுப்புலவர், கூளப்பநாயக்கன் காதல், விறலிவிடுதூது பாடிய பாண்டிநாட்டுத் திருமங்கலம் சுப்ரதீபக் கவிராயர், இராமநாதபுரம் சம்ஸ்தானம் மந்திரி முத்திருளப்பப்பிள்ளையின்மீது பிள்ளைவிடுதூது, மான்விடுதூது முதலியன பாடிய பாண்டிநாட்டு நமச்சிவாயப்புலவர்.

இவர் பாடிய நூல்கள்.

தொண்டைமண்டல சதகம் :— இது தொண்டைநாட்டுள்ள மூர்த்தி, தலம், அரசர், பிரபுக்கள், வள்ளல்கள், வித்துவான்கள், பாடப்பட்ட பிரபந்தங்கள் முதலிய முக்கிய விஷயத்தைப்பற்றித் தொகுத்துக் கூறும் ஓர் சிறு நூல். கட்டளைக் கலித்துறைப்பா வினத்தா லமைந்தது. சுருங்கச்சொல்லி விளங்கவைத்தலென்னும் அழகுடையது. சரித்திர ஆராய்ச்சி செய்வாருக்கு உறுபெருந் துணையா யுதவுவது. சரித்திர மெழுதுவோர்க்குச் சிறு வழிகாட்டியாயுள்ள சோழமண்டல சதகம், பாண்டிமண்டல சதகம், கொங்குமண்டல சதகம் முதலியவற்றிற்கு இது முற்பட்டதுமாம். இச் செய்யுள்களின் அழகும், அமைப்பும், கருத்தும், கற்றோர் காதலித்தேற்று மகிழத்தக்கன.

தண்டலையார் சதகம் :— இது தண்டலைநீணெறி யென்னும் தலத்துக் கடவுளைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு பழமொழியின் மூலம் நீதிகளை விளக்கிச் செல்லும் ஓர் சிறு பிரபந்தம். இது ஆற்றொழுக்காய் அழகிய பொருள் தருவதாய் இன்பம் பயப்பதாய் மிளிர்வது. பஞ்சதந்திரம், இதோபதேசம், சாணக்கிய நீதிவெண்பா போன்ற நீதித்துறைகளின் இனத்தைச் சேர்ந்தது. மாணவர் படித்து நல்வழிபடத் தக்க மாண்புடையது. இதனைப் பாடுவித்தோரும், அரங்கேற்றஞ் செய்தோரும் இன்னாரென விளங்கவில்லை.

புள்வேளூர்க் கலம்பகம் :— இந்நூல் நம் பார்வைக்குக் கிடைக்கவில்லை. இது தவிர இவர் பாடிய அரிய சந்தப்பாக்க ளொன்றும் அகப்படுவது அருமையாகவிருக்கிறது. இப் பிரதியும் மிக முயன்று கிடைத்ததைக்கொண்டு பரிசோதிக்கப்பெற்றது. சுபம்.

முற்றிற்று.

சி. கு நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

பிழை திருத்தம்.

வெண்டாமரை ௫, இதழ் எ, படிக்காசுப்புலவர் சரிதம், 147-ம் பக்கம், 29-ம் வரியில், "புள்ளிருக்கும் வேளூர்" என்பதைப் "புள்ளிருக்கு வேளூர்" என்று திருத்திக்கொள்க. புள் - சடாயு, இருக்கு - வேதம், வேள் - முருகக்கடவுள் இம் மூவரும் பூசித்ததனுனே புள்ளிருக்குவேளூர் எனப்பெயர்பெற்றது.

விரிஞ்சிபுரம் கோயில் கல்வெட்டு.

(விரிஞ்சிநாதேசரர் ஆலயத்துக் கோபுரத்தின் உட்புறத்தே வடவண்டையில் இரண்டாவது கல்வெட்டு.)

இக்கல்வெட்டு, விஜய நகரத்து வீரப்பிரதாப தேவராயர் காலத்தது. சகாப்தம் 1347 இன் நேர் விசுவாவசு வருடத்தியது. தர்ம சாஸ்திர ஆராய்ச்சியின் வழி வந்த ஓர் தீர்மானத்தைப்பற்றியது. இதனில் கன்னடிகர், தமிழர், தெலுங்கர், இலாளர் ஆகிய பல பிரிவுபட்ட பிராம்மணர் யாவரும் ஒருமனப்பட்டு இனி கன்யாதானமாகவே மணவினை செய்வதெனத் தீர்மானித்து அதற்கென இச் சிலாசாஸனமேற்படுத்திக் கையெழுத்திட்டனர். அது பின் வருமாறு:—

ஸ்ரீரஸ்து:

ஸ்வஸ்தி ஸ்ரீமன் மஹா இராஜாதி ராஜ பரமெஸ்வரான ஸ்ரீ (வீ) ரப்ரதாப தேவராய மஹா ராஜ ப்ரு

திவி ராஜ்யம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் ௲௩௱௪௰ எழின் மெல் செல்லா நி(ன்)ற விச்வாவசு வருஷம் பங்குனி மீ ௨-க்கு ஷஷ்டியு(ம்) புதன் கிழமையும் பெற்ற அஸ்விஷத்து நாள் படைவீட்டு இராஜ்யத்து

அசேஷவித்ய மஹா ஜனங்களும் அர்க்க புஷ்கரணி கோபிநாதசன் நதியின் லெ)

தர்ம்மஸ்தாபன ஸ்மய பத்ரம் பண்ணி குடுத்தபடி இற்றை நாள் முதலாக இந்த

ப்படைவீட்டு ராஜ்யத்து ப்ராம்ஹணரில் கன்ன(டி)கர் தமிழர் தெலுங்கர் இலாளர் முதா

ன அசேஷ கோத்ரத்து அசேஷ சூத்ரத்தில் அசேஷ சா(கெ)கயிலவர்களும் விவாகம் பண

னுமிடத்து கன்யாதாநமாக பண்ணக் கடவராகவம். கந்யதாநம் பண்ணுமல்

பொன் வாங்கிப் பெண் குடுத்தல் பொன் குடுத்து விவாஹம் பண்ணிஞல் இராஜ தண்டத்துக்கும் உட்பட்டு

பிராம்ஹண்யத்துக்கும் புறம்பாகக் கடவாதென்(று) பண்ணி(ந) தர்ம்ம ஸ்தாபன ஸமய பத்ரம். இப்படிக்கு அசேஷ வித்யா ம

ஹா ஜநங்கள் எழுத்து"

பின்னர் சில கையெழுத்துகள் வருகின்றன.

(கிரந்தாக்ஷரமும் தமிழும் கலந்திருந்த இக்கல்வெட்டினை முழுவதும் தமிழில் வரைந்துள்ளேன்)

ரா. வாசுதேவன்,

புதுவை.

சகோதரர் ஒற்றுமை.

(ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்களால் எழுதப்பட்டது.)

"நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ் — மாறில்
உடன்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி இல்லா மனை"—(ஔவையார்.)

'சகோதரர்' என்னுஞ் சொல் வடமொழியில் ஒரேவயிற்றிற் கூடப்பிறந்தவர் என்னும் பொருளைத் தருவதாகும். ஆகவே உடன்பிறப்பு என்னுந் தமிழ்ச்சொல்லும், சகோதரர் என்னும் வட சொல்லும் ஒரே பொருளைத் தந்து ஒத்து நிற்கின்றன. தலைப்பில் எடுத்துக் காட்டிய ஔவையார் திருவாக்கின்கண் 'பகைமை இல்லாத உடன்பிறப்பாளர் இன்றித் தனியே பிறக்கும் பிறப்புப் பயனற்றதாகும்' என்பது வலியுறுத்தப்பட்டது. இதனால் அன்புடன் மனங் கலந்து அளவளாவும் சகோதரர் கூடப்பிறந்த பிறவியே பயனுடையதாகுமென்பதும், பகைமைக் குணங்கள் உள்ள சகோதரருடன் பிறப்பது பெருந் துன்பத்திற்கே இடமாகுமென்பதும் நன்கு பெறப்படும். பொல்லாத சகோதரருடன் பிறப்பது பெரிதுந் துன்பந் தருவதாம் என்பதனை இந்தப் பாட்டின்கண் மறைவாகக் கூறினாராயினும்,

உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி — உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு.

என்னும் மற்றொரு பாட்டிலே அதனை விளக்கமாகக் கூறியிருக்கின்றார். அது நிற்க, இனிப் பகைமைக் குணங்கள் உள்ள சகோதரருடன் பிறப்பதினும், தன்னந் தனியே பிறப்பது நன்றன்றோவெனின், தனியாய்ப் பிறந்தால், உலகவாழ்க்கையில் அடுத்தடுத்துக் கிளைக்கும் பலவகை அல்லலிற் பட்டு உழலவேண்டி வருமாதலால் தனிப்பிறவியெடுப்பது நன்றாக மாட்டாது. எந்தக்காலத்திலும் மனிதன் பிறர் உதவியையுந் துணையையும் நாடாமல் உயிர் வாழல் முடியாது. இவன் தாயின் கருப்பையிலிருந்து பிறக்குங் காலத்தே முழுதும் அறியாமை உள்ளவனும், பிறகு சிறிது சிறிதே வளர்ந்துவரும் காலங்களிலெல்லாம் பிறருடைய சேர்க்கையாற் சிறிது சிறிதாக அறிவு விளங்கப்பெற்று வரும் சிற்றறிவு உடையவனும், தனக்கு வேண்டும் ஊண், உடை முதலான எல்லாப் பொருள்களையும் பிறரது முயற்சியாற் பெறவேண்டியவனும், தனக்கு வேண்டும் வசதிகளைத் தான் தேடிக்கொள்ள முயலும்போதும் தான் பலருடைய உதவியையும் துணையையும் வேண்டி நிற்பவனும், தனது சிறு வாழ்நாளின் இடையிடையே தான் நோயில் அகப்பட்டு வீழ்தலின் அக் காலங்களிலெல்லாம் இவன் தனக்கு நோய் தீர்ப்பார் பேருதவியைக் கட்டாயம் விரும்பி நிற்பவனும் இருத்தலால் மனிதன் தனது துன்பத்திற்கும் இன்பத்திற்கும் அறிவுக்கு மெல்லாம் பிறரைச் சார்ந்தவனாகவே யிருக்கின்றான்.

இங்ஙனம் பிறரைச்சார்ந்தே உயிர் வாழும் நிலைமையிலுள்ள மனிதனுக்கு எல்லா வகையிலும் உதவியுந் துணையுமாய் நிற்கத்தக்கவர்கள் எவர்கள்? என்று ஆராய்ந்து பார்க்குங்கால், தன் உடம்போடு தொடர்பு உடையவர்களேயல்லாமல் மற்றவர்கள் அல்லரென்பது நன்கு விளங்கும். தன்னைப்பெற்ற தாயுந் தந்தையும், தன்னோடு பிறந்த அண்ணன், தம்பி, அக்கை, தங்கைமாரும், தன்னைச்சேர்ந்த மனைவியும், தன் வயிற்றிற் பிறந்த பிள்ளைகளும் தன்னிடத்து அன்பு பாராட்டி உதவியுந் துணையுமாய் நிற்றல்போல, உடம்பின் தொடர்பு இல்லாத மற்றவர் அங்ஙனம் இயற்கையான அன்பு காட்டி ஒருவனுக்குத் சார்பாய் நிற்றல் அரிதினும் அரிது. பிறர்க்கு நாம் எவ்வளவு பொருளைக் கொடுத்தாலும் எவ்வளவு உதவியைச் செய்தாலும் நமக்குப் பெரிய இடுக்கண் வந்தகாலத்தில் அவர் நம்மை விட்டு நீங்குவர். இதுபற்றியன்றோ ஔவைப் பிராட்டியார்,

"மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை — சுரந்தமுதம்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல் .
உற்றா ருலகத் தவர்" என்று அருளிச்செய்தார்.

ஆயினும், சிற்சிலர் தமக்குள் உடம்பின் றொடர்பு இல்லாதவராய் இருந்தும், உயிரும் உடம்பும்போல் அத்தனை நேசமும் அன்பும் உடையவராய் எவ்வகை இடுக்கண் வந்த காலத்தும் பிரிவின்றியிருக்கக் காண்கிறோமே யென்றால், அத்தகையோர் சிலநாளில் அழிந்துபோகும் இப் புலால் உடம்பின் தொடர்பை நோக்காது ஒருவரிடத் தமைந்த உயர்ந்த அறிவையும், உயர்ந்த அன்பையும், உயர்ந்த செயலையும் நோக்கி நெகிழாத அன்பு பூண்டு, அவர்பொருட்டுத் தமது ஆவியையுங் கொடுப்பாராதலின் அஃது இங்கே காட்டற்பாலதன்று. மனிதனுக்கு இயற்கையில் உண்டாகும் நேசமானது உடம்பின் தொடர்பால் வருதலின் அதுவே இங்கு ஆராயற்பாலதாகும்.

இனி உடம்பின் தொடர்புடையோரிலும், தன்னைப்பெற்ற தாயுந் தந்தையும் தன்னினும் பருவம் முதிர்ந்தோராய்த் தன்னைக் குழவிப்பருவந் தொட்டுப் பாதுகாத்து வளர்க்கப் பெருந் துன்பத்தை அடைந்தவர்களாதலால் அவர்களுக்குத் தான் உதவியுந் துணையும் ஆகவேண்டுமே யல்லாது, அவர்களுடைய உதவியையுந் துணையையுந் தான் நாடலாகாது. தன்னைச்சேர்ந்த மனைவியோ பெண்பாலாய்த் தன் உடம்பைப் பாதுகாத்துத் தனது இன்பத்திற்குக் காரணமாய் இருத்தலால், அவள்பாற் பேருதவியையும் பெருந் துணையையும் பெற விரும்புதல் ஆண்டன்மைக்கு அழகிதன்று. தன் வயிற்றிற் பிறந்த பிள்ளைகளோ சிறு மதலைகளாய்ப் பருவம் முதிரும் மட்டும் தன்னாற் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாய் இருத்தலால் தனது முதுமைக்காலம் வரையில் அவர்களுடைய உதவியையுந் துணையையும் ஒருவன் எதிர்பார்க்கலாகாது. இனித் தன் உடன்பிறந்தோருள்ளும் தன் அக்கையுந் தங்கையும் பெண்பாலராகலின் அவர்க்குத் தான் உதவியுந் துணையுமாய் நிற்றலே முறைமையாம். இவரெல்லாம் இங்ஙனமாக, தனக்கு உயிர் வாழ்நாள் முழுதும் உண்மையான உதவியுந் துணையுமாய் நிற்றற் குரியவர் எவரெனின், தன்னொடு சிறிதேறக்குறைய ஒத்த வயதும், ஒத்த அறிவும், ஒத்த தோழமையும், ஒத்த அன்பும் உடைய சகோதரரேயாவர் என்பது முடிக்கப்படும். இங்ஙனஞ் சகோதரர் மாத்திரமே தனக்கு உறுபெருந் துணையுமாய் உதவியுமாய் நிற்றலால், நல்ல சகோதரரை இல்லாப் பிறவி பயனற்றதென்று ஔவையார் அருளிச்செய்வாராயினர். நல்ல சகோதரரைப் பெறுதல் எவற்றி

னும் அரிதென்பதும் அத்தகைய சகோதரரைப் பெற்றவனுக்கு ஆகாதது ஒன்றில்லை யென்பதும் உணர்த்தும்பொருட்டே சீவகசிந்தாமணியிலும்,

"திண்பொரு ளெய்த லாகுந் தெவ்வரைச் செருக்க லாகும்
நண்பொடு பெண்டிர் மக்கள் யாவையு நண்ண லாகும்
ஒண்பொரு ளாவ தையா வுடன்பிறப் பாக்க லாகா •
எம்பியை யீங்குப் பெற்றே னென்னெனக் கரியதென்றான்."

என்று திருத்தக்க தேவரும் அருளிச் செய்தனர். இங்ஙனமே, கந்தபுராணத்திலும் சூரபன்மன் தன் தம்பி சிங்கமுகனை நோக்கி,

"பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
பின்னை யுளபொருளை யெல்லாம் பெறலாகும்
என்னை யுடைய விளையோனே யிப்பிறப்பில்
உன்னை யினிப்பெறுவ துண்டோ வுரையாயே"

என்று கூறியதும் உற்று நோக்கற்பாலதாகும்.

இங்ஙனம் பெறுதற்கரிய சகோதரத்துவத்தைப் பெற்றும், அண்ணன் தம்பிமார் சிலர் இதன் அருமையைச் சிறிதும் உணராமல் ஒருவரையொருவர் பகைத்தும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொண்டும், ஒருவரை ஒருவர் வஞ்சித்தும் ஒற்றுமை கெட்டுத் தமது பிறவியைப் பாழாக்குகின்றனர். ஏதோ முற் பிறவியிற் செய்த தவத்தால் இறைவன், தமக்குச் சகோதரரைத் தந்தருளினன் என்றும், அவன் தந்த இப் பெரும்பேற்றை நாம் பாதுகாத்துக்கொள்ளுதல் வேண்டும் என்றும் நினைந்துபாராதவர் மனிதர் ஆவரோ? தாம் உடன் பிறந்தோம் என்பதைச் சிறிதும் உணராத மிருகங்களுக்கும், தம் உடன் பிறப்பின் அருமையை உணராத மனிதருக்கும் வேற்றுமை உண்டோ? பாருங்கள் அன்பர்களே! ஓர் ஆவின் கன்றுகள் பலவும் பருவம் முதிர முதிரத் தாம் உடன் பிறந்ததனைச் சிறிதும் அறியாமல் தம் தம் வழியே போகின்றன. அதுபோலக் குழவிப் பருவத்தே ஒருங்கு பிறந்து ஒருங்கு வளர்ந்த சகோதரரும் தம்மை ஒன்றாய்ப் பிறப்பித்த ஐயனது திருவுளக் கருத்தைச் சிறிதும் நினையாமல் ஒற்றுமை கெட்டுத் தனித் தனியே செல்லுதல் கூடுமோ? சிலநாளிருந்து தமது கையை விட்டு அகலும் செல்வத்தின் பொருட்டாகவும் இடையே வந்து சேர்ந்த மனையாளின் பொருட்டாகவும் சகோதரர் பகைமைகொண்டு வேறு வேறாகப் பிரிந்து ஆண்டவன் நோக்கத்திற்கு மாறாய் ஒழுகுதல் மன்னிக்கப்படாத பெருங் குற்றமாய் முடியும். இப் பிறப்பில் ஒருவன் தான் நினைந்தவண்ணம் தம்பியைப் பெறல் முடியுமா? தம்பி தமையனைப் பெறல் முடியுமா? தம்மாற் புதிதாகச் செய்துகொள்ள

முடியாத சகோதரத்துவத்தின் அருமையை உணர்ந்து சகோதரர் தமக்குள் மிகவும் அன்புடையவராய் ஒற்றித்து வாழ்ந்து தமக்கும் உலகத்திற்கும்பயன்படல் வேண்டும். தம்பிமார் கல்வியிலும் அறிவிலும் எவ்வளவு சிறந்தவராயினும், பருவத்தில் முதிர்ந்த தம் தமையன்மார்க்குக் கீழ்ப்படிந்து ஒழுகி அவரைத் தம்மோடு இணக்கிக்கொள்ளல்வேண்டும். தமையன்மார் வயதில் மூத்தவராயிருப்பினும் கல்வியிலும் அறிவிலும் சிறந்த தம் தம்பிமார்க்கு இணங்கி நடத்தல் வேண்டும். சகோதரர் தம் மனைவிமார்க்கு உடன் பிறப்பின் அருமையை அன்போடு தெளிவாக எடுத்துக் காட்டி அவரெல்லாம் ஒன்றுபட்டு நடக்கும்படி திருத்தல்வேண்டும். சகோதரரில் ஒருவர் கல்வி வளர்ச்சியின் பொருட்டும் பிற உயிர்களின் துன்பத்தைத் தடைக்கும் பொருட்டும் செல்வத்தை நன்கு செலவிட்டுப் பயன்படுத்துவராயின் அதனைக் கண்டு ஐயோ! எம் சகோதரர் எங்கள் செல்வத்தையெல்லாம் அழித்துவிடுகின்றனரே என்று மற்றவர் வயிறு எரியாமல் 'ஊர் நடுவிலுள்ள இனிய குளம் எல்லார்க்கும் பயன்படுதல் போல, நாம் பெரிதும் முயன்று தொகுத்த பொருளெல்லாம் தக்கார் பலர்க்கும் பயன்படும்படி அதனை நல்வழிப்படுத்தி நமக்கும் நமது குடும்பத்திற்கும் பெரும் புகழையும் பெரும் புண்ணியத்தையும் வருவிக்கும் இவரைச் சகோதரராகப் பெற்ற எமது தவமே தவம்' என்று மனம் மகிழ்ந்து அவர்க்குத் தாமும் உதவியாய் நிற்றல் வேண்டும்.

"ஊருணிநீர் நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு" என்றும்,
"தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்றும் திருவள்ளுவ நாயனார் அருளிய திருவாக்கை இடையறாது நினைந்து சகோதரராவார் பொருட்செலவாற் பகைமைகொள்ளாது ஒற்றுமைப்பட்டு வாழக் கடமைப்பட்டிருக்கின்றார். துன்பம் வந்த காலத்தும் இன்பம் வந்த காலத்தும் சகோதரர் ஒன்றாயிருந்து அவற்றை அனுபவித்தலே அவர் தமக்குமுறையாம். பாண்டவர் ஐவரும்நாடிழந்து காடுபோய்த் துன்புற்றபோதும், திரும்பி நாடடைந்து அரசியற்றி இன்புற்றபோதும் அவர் ஒன்றாயிருந்தமை இன்னும் புகழப்படுகின்றதன்றோ? தன் சொற் கேளாத தமையன் சூரபன்மனைத் தான் விட்டுப்போகாது அவனோடு கூடவே உயிர் துறந்த அவன் தம்பி சிங்கமுகனது அரிய சகோதர அன்பு இன்னும் பாராட்டப்படுகின்றதன்றோ? தன் தமையன் இராமனோடு கூடவே காடு புகுந்து அவன் உறங்குங் காலத்துந் தான் உறங்காமல் அவனுக்குப் பதினான்கு வருடம் பாதுகாவலாய் நின்று அவன் பொருட்டுப்

பெரிதும் துன்புற்றும் அன்பிற்சிறந்த அவன் றம்பி இலக்குமணன் அரிய சகோதர ஒற்றுமை இன்னும் உலகத்திற்கு ஒரு நன்மாதிரியாய் விளங்குகிறதன்றோ? இங்ஙனமெல்லாம் தம் சகோதரரோடு ஒன்று கூடி வாழ்ந்தவர்க்கே மற்றவர்களையும் சகோதரராய்ப் பாவித்துப் பேரன்பு பாராட்டி இறைவன் திருவருளைப் பெறும் பெருஞ்செல்வம் உண்டாகும் என்க.

திராவிடன்.

தேவஸ்தான நிர்வாக ஏற்பாடுகள்.

நமது நாட்டில் தேவஸ்தானங்களைப் பரிபாலனம் செய்வதற்குப் பஞ்சாயத்தார்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் செவ்வனே காரியபாகங்களை நடத்துவதற்கு ஒருவிதமான ஒழுங்குகள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். கூடியவரையில் ஒழுங்காக நடத்துவதற்கு வேண்டிய வழிகளில் பணத்தை பாங்கில் இருப்பு வைப்பதும் ஒன்று என்பதைக் கவனிக்கவேண்டும்.

இம்மாதிரி திட்டங்கள், பல தேவஸ்தான பரிபாலன சபையாருக்கு உபயோகமாக இருக்குமென்கிற உத்தேசத்துடனும், நம்புதுவையம்பதியில் வாழும் மதாபிமானிகள் புதிய சீர்திருத்தங்களை அறிந்து அதில்அதிக பற்றுள்ளவர்களாவார்கள் என்ற எண்ணத்துடனும் அடியில் கண்ட திட்டங்களைப் பிரசுரிக்கலானோம்.

புதுவை ஸ்ரீவேதபுரீசுவரர், ஸ்ரீவரதராஜப்பெருமாள் தேவஸ்தானங்களினுடைய பரிபாலன சபையின்

நிபந்தனைகள்.

1-வது அத்தியாயம்.

1911-ம் ஆ௵ குவர்னேர் சட்டத்திற்கு மாறுதலாக ஒரு விஷயமும்' அனுஷ்டிக்கப்படமாட்டாது.

2-வது அத்தியாயம்.

மாதத்திற்கு 1 அல்லது 2 முறை கூட்டம் கூடப்படும்.

சபைத்தலைவர் (President) அவர் அசந்தர்ப்பத்தில் உதவித் தலைவர் (Vice Presideut) கூட்டத்தைக் கூட்டுவோர்.

கூட்டம் இன்ன விஷயத்தைப்பற்றிக் கவனிக்குமென்று தெரிவிக்கப்படும்.

சகல சுற்றுக்கடிதங்களும் (Circulaire) காரியதரிசியால் (Secrétaire) சித்தம் செய்யப்படும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் சபைத்தலைவர், அவர் அசந்தர்ப்பத்தில் உதவித்தலைவர், காரியதரிசி, தனரக்ஷகர் (Caissier) இவர்கள் கூட்டத்திற்கு வராமலிருக்க, கூட்டம் ஆரம்பிக்கப்படமாட்டாது.

3 வது அத்தியாயம்.

மாதாந்தக் கூட்டத்தில் வரவு, செலவு, இருப்பு, வரவேண்டியது, தகரார் முதலிய விஷயங்களை ஆராய்ச்சிசெய்து முடிவுசெய்யவேண்டியது.

கூட்டம் கூடி முடிவுசெய்த விஷயங்களை வர்த்தமான சாசனத்தில் (Procès-Verbal) கண்டு கூட்டத்திற்கு வந்துள்ள அவயவி (Membre) களிடத்தில் கையொப்பம் பெறவேண்டியது.

வர்த்தமான சாசனம் எழுதுவது, கையொப்பம் பெறுவது காரியதரிசி பொறுப்பைச் சார்ந்தது.

4-வது அத்தியாயம்.

ஜனவரி மீ கூட்டத்தில் கடந்த வருஷத்திய கணக்குகளைப் பரிசோதித்து அங்கீகரிக்கவேண்டியது.

மேற்படி கணக்குகள் அல்லது விபர டாப்பு தனரக்ஷகர் கையொப்பமிட்டுக் காரியதரிசி பார்வையிட்டு, சபைக்குக் கொடுக்கவேண்டியது.

ஷெடி டாப்பில் பின் சொல்லும் பிரதான விபரங்களும் தெரியப்படுத்தியிருக்கவேண்டியது.

1. நன்கொடை செய்தவர்கள் செய்திருக்கிறவர்களின் பெயர்கள்.

2. சொத்துக்களின் சகல விபரங்கள். ரொக்கம், அல்லது பூஸ்திதி இனம், இடம், விஸ்தீரணம், கொண்ட கிரயம், தற்கால மதிப்பு, வருமானம், தீர்வை.

3. நன்கொடை யளித்தவர்களின் மனோபீஷ்டம்.

4. ஷெ நன்கொடை அடைந்தது எந்தப் புருஷகாரியின் முயற்சி. (இருந்தால்)

5. தேவஸ்தானங்களின் பூஸ்திதி விபர டாப்பு. இதுவரையில் தேவஸ்தானங்களின் ஐசுவரிய நிலைமை.

5-வது அத்தியாயம்.

ஜனவரி மீ 2-வது கூட்டத்தில் நடைமுதல் வருஷத்திற்கு வரக்கூடிய வருமானம், ஆகவேண்டிய செலவுகளுக்கு ஏற்பாடு செய்யப்படும்.

மேற்படி ஏற்பாட்டின் பிரதான விபரங்கள் :—

அகஸ்மாத்தாய் நேரிடக்கூடிய நஷ்ட சேதாரங்களுக்காகக் கையிருப்பு இருக்கவேண்டிய தொகை இவ்வளவு. தேவஸ்தான மராமத்துச் செலவுகளுக்கு இவ்வளவு.

நிலங்களின் வருஷவாரி சீர்திருத்தங்களுக்காக உபயோகிக்க வேண்டியதற்குத் தொகை.

தேவஸ்தானங்களுக்குச் சொந்தமான வீடுகள், கடைகள் பழுது பார்த்தலுக்காகத் தொகை.

மேற்சொன்னவைகளுக்கு மொத்த வருமானங்களில் 100-இ 10 எடுத்து வீதித்துக்கொள்ளப்படும்.

தினப்படி நடக்கவேண்டிய தெய்வாராதனைகளின் விபரம்.

ஷெ கட்டளைகள் விபரம். அவைகளுக்குச் செலவுகள்.

சிப்பந்திகளின் விபரங்கள். தினப்படி அல்லது மாதம், அல்லது வருஷச் செலவுகள், சம்பளங்கள்.

6-வது அத்தியாயம்.

தேவஸ்தானங்களின் சம்பந்தமான சகல உத்தரவுகளும் சபையில் முடிவுசெய்யப்படும்.

முடிவுசெய்யப்பட்ட உத்தரவுகளை, சபைத்தலைவர் அவர் அசந்தர்ப்பத்தில் உதவித்தலைவர் கடித மூலமாய் ஷெ உத்தரவைக் காரியதரிசிக்குத் தெரிவிக்கவேண்டியது.

ஷெ உத்தரவுகள் காரியதரிசி மூலமாய் நிறைவேறப்படவேண்டியது.

7-வது அத்தியாயம்.

1. தேவஸ்தான சகல வருமானங்களை வசூல்செய்யவேண்டியதும் செலவிடவேண்டியதும் தனாகூஷகரைச் சேர்ந்தது.

2. வசூலிக்கவேண்டிய வருமானம் செய்யவேண்டிய செலவுகளின் டாப்பு, காரியதரிசி கையொப்பமிட்டுத் தனாக்ஷகருக்கு அனுப்பப்படும்.

8-வது அத்தியாயம்.

வசூல் செய்யப்படும் தொகைகள் பரிபாலன சபையாரால் குறிக்கப்படும் பாங்கில் கட்டிவிடப்படும்.

7-வது அத்தியாயம் (2-ல் கண்ட பில்படி செலவுகளுக்குச் செக்கு மூலமாக பாங்கில் பணமெடுத்துச் செலவு செய்யப்படும். செலவிடப்பட்ட செலவுகளுக்கும் வருமான வரவுகளுக்கும் அத்தாட்சி ரசீதுகளிருக்கவேண்டியது.

9-வது அத்தியாயம்.

தேவஸ்தானங்களின் அர்ச்சகர்கள், சிப்பந்திகள் இவர்களை நியமனஞ்செய்வது, நீக்குவது, கண்டிப்பது முதலியவை சபையின் காரியதரிசி மூலமாக, அல்லது அவர் கேள்வி, அல்லது அவர் சிபார்சின்பேரில் சபை ஏற்பாடுகள் செய்யும்.

காரியதரிசி மூலமாகவே ஏற்பாடுகள் நிறைவேறப்படும்.

10-வது அத்தியாயம்.

குத்தகை, வீடு, கடைகள் முதலியவற்றின் வாடகைகள் ஒரு வருஷத் தவணைக்கு அக்டோபர் மீ த்தில் போட்டி சம்பந்தமாயும் வசூலிக்கக்கூடியதற்கும் போதுமான உத்தரவாதமான ஏற்பாடுகளுடன் செய்யப்படும்.

உபய தேவஸ்தானங்களின் பண்டு உற்சவம் நீங்கலாக இதர உற்சவங்கள் செய்யவேண்டியதாயிருந்தால் உற்சவங்களின் உடையவர்கள் அல்லது புருஷகாரிகள் சபையின் அனுமதியில்லாமல் செய்தால் அதனால் ஏற்படுகிற புகார் முதலானவைகளுக்குச் சபையின் அவயவிகள் உத்தரவாதிகளாகமாட்டார்கள்.

சரிப் பிரதிக்கு,

காரியதரிசி,

பொன்னு. முருகேசப்பிள்ளை.

நியாயமாலா.

(வெண்டாமரை ௩, இதழ் ௭, ௧௭௯-ம் பக்கத் தொடர்ச்சி.)

19. காஷ்ட மதனாக்னி நியாயம்:– காஷ்ட மதனாக்னி–கட்டையிற் கடைந்தெடுக்கப்பட்ட தீ, நியாயம் – திருஷ்டாந்தம்.

இது நாமரூப மயப் பிரபஞ்சத்தினின்றும், சற்குருவாக்கிய சிந்தனாரூப மனனத்தால் சாக்ஷாத்கரிக்கப்பட்ட சிவாக்கினியானது நாமரூப மயப் பிரபஞ்சத்தைத் தன்மயமாக்கிக்கொள்ள விதுபோலவென்கின்றது. அதாவது: கட்டையினின்றும் கடைந்தெடுக்கப்பட்ட தீயானது அக்கட்டையைத் தன்மயமாக்கிக்கொள்வதுபோலவென்பதாம்.

20. **ஸ்வப்ன ஜகந்நியாயம்:**- ஸ்வப்ன ஜகத்-கனாவுலகு, நியாயம் - திருஷ்டாந்தம்.

இது காரண காரிய ரூபமாய்க் காணப்படும் இச்சாக்கிரப் பிரபஞ்சம், பிரம்ஹத்தினிடத்துக் காரண காரிய பாகுபாடின்றியுண்டாதலிது போலவென்கின்றது. அதாவது: கனாவுலகில் காரணகாரியப் பாகுபாடுடையதாகக் காணப்படும் பிதா புத்திராதி சகலமும் காரணகாரியத்துவாபேக்ஷையும், காலாந்தராபேக்ஷையுமின்றி ஏககாலத்திற்றோன்றுமாறு போலவென்பதாம்.

21. **கஜபுக்த பிரமராம்புஜ நியாயம்:**- கஜபுக்த - யானையினாலுண்ணப்பட்ட, பிரமராம்புஜம் - வண்டு தங்கிய தாமரை மலர், நியாயம் - திருஷ்டாந்தம்.

இது சம்சார சுகவடிவ சிற்றின்ப நுகர்ச்சி விருப்பால், நம் முதுமைப் பருவத்தில் வீட்டுநெறியிற் றலைப்படுவாமென எண்ணமிட்டிறக்கும் ஜீவர்களை மிருத்யு தேவதை வாயிற்போட்டுக்கொள்ளலிதுபோலவென்கின்றது. அதாவது: தேனருந்தும் விருப்பால் அல்லது கந்தானுபவ விருப்பால் தாமரைமலரிற்றானே இரவெல்லாம் வசித்திருந்து சூரியோதயத்தில் தாமரை மலருங்கால் வெளிக்கிளம்பிவிடுவோமென எண்ணமிட்டுக்கொண்டிருந்த வண்டு தங்கிய தாமரை மலரை ஒரு யானையானது பிடுங்கி வாயிற் போட்டுக்கொண்டு போமாறு போலவென்பதாம்.

(வரும்.)

இதோபதேசி.

நியாயமாலாவைப்பற்றி.

நியாயமாலிகை எம்மதங்கட்கும் பொதுவாயிருப்ப ஒரு மதம் பற்றியே விளக்கல் அதனை நன்குணராமையும் நியாயமன்மையுமாம். சித்திரப்படம் அல்லது சித்திரப் பித்திகை ஏகான்ம வாத மதம்பற்றி

விளக்குவது அடாது. என்னை? விவர்த்தநம் அதன்கட் கூறப்படாமையினானும், சித்தாந்தத்துள் பித்திகை வடிவம் காண்பார்க்குக் காணப்படாதாயதன்கண் மறைந்த சித்திர வடிவம்போல முழுப்பொய்யெனக்காண்க என்பது கூறப்படுதலினானும் "மரத்தை மறைத்தது மாமதயானை மரத்தின் மறைந்தது மாமதயானை" என்பதுமதுவாகலின் நியாயமாலிகையை ஒரு மதம் பற்றி விளக்காது வடசொற்களைத் தென்மொழியாக்கலே நடுவு நிலைமைத்தென்க.

நடுநிலை நாடி.

முக்திகோபநிஷத்.

(வெண்டாமரை ௪, இதழ் ௧௦, 207-ம் பக்கத் தொடர்ச்சி.)

(சித்த ஏகாக்கிரம் சாதனமாகவுள்ள தியானத்தையும், அதனால் விருத்திவிலயத்தையும், அதனாலுண்டாகும் ஸ்வரூபாநந்தத்தையும் கூறுகின்றார்.)

௫௨. பிராணசாஞ்சல்ய நிரோதனத்தின் பிறகு, அச்சித்த ஏகாக்கிரத்தைச் சாதனமாகவுடைய தியானமானது சௌகல்யமாக உபதேசம் செய்யப்படுகின்றது. சம்பூர்ணமான சம்பவக்கிரமத்தினாலும் வியத்தியக் கிரமத்தினாலும் (அதாவது ஒவ்வொரு விருத்தியைப் பிறப்பித்துக் கொண்டு ஒவ்வொரு விருத்தியை லயிக்கச்செய்துகொண்டு) மனோவிருத்திகளை லயிக்கச்செய்து மிகுந்ததாயுள்ள ஞானமாத்ரமான அகண்டைகரஸாநந்தத்தை ஆலோசிப்பாயாக.

விஜாதீயங்களான தேகேந்திரியாதி விருத்திகளையும் காமாதி விருத்திகளையும் திரஸ்கரித்து, ஸஜாதீயங்களான நித்ய புத்த சுத்த சச்சிதாநந்த அத்விதிய்யாதி விருத்திகளை நிரந்தரம் அனுசந்தித்தல் தியானமாகும். இந்தத் தியானத்தினாலே விருத்திகளுடைய லயோதயங்களைக் கண்டுபிடித்து, சேஷமில்லாமல் மனோவிருத்திகள் லயிக்க அப்போது மிகுந்த வஸ்துவைச் சச்சிதாநந்தஸ்வரூப பிரம்மமாக, அப்பிரம்மத்தை உன்னையாக, பேதமில்லாமற் பார்த்தலே அகண்டைகரஸஸ்வரூப நிர்விகல்ப சமாதியென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்றாரென்க.

௫௩. அபானம் லயிக்க எதுவரையில் பிராணன் இருதயத்தில் உதிக்காதோ அதுவரையில் யோகிகளால் எது அனுபவிக்கப்படுகின்றதோ அது கும்பகமென்னும் அவஸ்தை.

பிராண அபானங்களில் அபானன் லயிக்க, பிராணன் இருதயத்தில் உதிக்காதோ அது அகக் கும்பகாவஸ்தையென்க. இது யோகிகட்கு அனுபவம்.

௫௪. பிராணன் பாகியத்தில் அஸ்தமிக்கையில் எவ்வளவுக்குள்ளே அபானன் வெளிப்படாதோ அவ்வளவுக்குள்ளே பூர்ணமான சமாவஸ்தையை பாகியத்திலாவது கும்பகாவஸ்தையாக யோகிகள் தெரிகின்றார்கள்.

பாகியத்தில் பிராணன் லயிக்க எதுவரையில் அபானனது சஞ்சாரம் உதிக்காதோ அது பாகிய கும்பகமென்றும் பூர்ணமான சமாவஸ்தையென்றும் யோகிகள் தெரிந்துகொள்கின்றாரென்க.

இந்த ஆந்தராப்பியாச கும்பகங்களின் இரகசியத்தைத் தேசிகர் மூலமாகத் தெரிந்துகொள்ளவேண்டியது.

(இனி சம்பிரஞ்ஞாத சமாதியைச் சாற்றுகின்றார்.)

௫௫. அகங்காரமில்லாமல் தியானத்தினது அப்பியாசத்தின் பிரகர்ஷையினால் பிரம்மாகாரத்தையடைந்த மனோவிருத்திகளின் பிரவாகம் எதுவோ அது சம்பிரஞ்ஞாதம் என்னும் பெயருள்ள சமாதியாகின்றது.

தேகாதிகளில் அகங்காரமின்றி நிரந்தரம் பிரபலமான தியான அப்பியாசத்தினாலே மனோவிருத்தி பிரம்மாகாராகாரிதமா யிருக்குமோ அது சம்பிரஞ்ஞாத சமாதியென்று பெரியோர் சொல்லுவரென்க. விருத்தியாகாரமனம் தெரியப்படுகின்றதாதலின் இப்பெயர் வந்தது.

(அசம்பிரஞ்ஞாத சமாதி யிலக்கணம் கூறுகின்றார்.)

௫௬. மனது நன்றாக பிரம்மாநந்தத்தைப் பிரகாசிக்கச் செய்து கொண்டு எப்போது மிகவும் அடங்கி லயித்த விருத்திகளையுடையதாகின்றதோ அப்போது ஞான யோகிகளுக்குப் பிரியமாய் இந்தச் சமாதி, அசம்பிரஞ்ஞாத மென்னும் பேருள்ளதாகின்றது.

மனது விருத்திகளின்றிப் பிரம்மாநந்தரூபமாகுவது யோகிகட்கு மிகவும் பிரியமாய் அசம்பிரஞ்ஞாத மென்னும் பெயருடைய சமாதியாகுமென்க.

மனது நன்ருக இலயிக்க அம்மனதின் இருப்பு தெரியாதாதலின் அசம்பிரஞ்ஞாத சமாதியென்று சொல்லப்படுகின்றது. சம்பிரஞ்ஞாத சமாதியுடையவர் யோகிகள், ஜீவன் முக்தர்; அசம்பிரஞ்ஞாதமான . போது விதேக முத்தர்கள்.

(சமாதி விசேஷத்தைச் சொல்லுகின்ருர்.)

௫௭. சாக்கிர வாசனைகளில்லாததும் மானசிக வாசனைகள் இல்லாததும் காரண அவித்தை வாசனைகள் சுழுத்தி வாசனைகள் இல்லாததுமான எந்த தசையுண்டோ இந்த எல்லாப் பொருள்களையும் விலக்குதலே யுருவமாகவுள்ள நிருபாதிக சொரூபாவஸ்தானந்தசை, ஞானிகளால் எப்போதும் அனுபவிக்கப்படுகின்றதாகின்றது.

சம்பிரஞ்ஞாத அசம்பிரஞ்ஞாத சமாதிகளன்றி, சகல திருசியங்களையும் நிஷேதிக்கையில் மிருந்துள்ள சுத்த சொரூபமான ஆத்மானந்தாவஸ்தை அதத்வியாவிருத்தி ரூப சமாதி யென்று முனிவர் பாவிப்பரென்க.

பிரம்மத்தினிடத்து நானுத்வமில்லை; அது உபாதியினுலுண்டானது; ஸ்தூல சூக்ஷ்மாதி தர்மங்களில்லாதது; எனவே சகலமும் நிஷேதிக்கையில் மிருந்துள்ள சுத்த பிரம்மாநந்த சொரூப சமாதியென்று பல சுருதிகள் அச் சமாதி யிலக்கணத்தையே சொல்லுகின்றன.

(இன்னெரு சமாதி விசேடம் கூறுகின்ருர்.)

௫௮. மேலெல்லாம் நிறைந்துள்ளதும் இடையிலுள்ள பிரதேசமெல்லாம் நிறைந்துள்ளதுமான எந்தச் சர்வபரிபூரண பிரம்மாநந்த தசையுண்டோ இந்த பிரம்ம ஐக்கிய அவஸ்தையானது சாக்ஷாத்ரூபமான போதசொரூபமாகவுள்ளது. இது சாஸ்திரப்பிரமாண சித்தமானது.

பிரம்மசொரூப பிரகாசகங்களான நித்தியத்துவ சுத்தத்துவ புத்தத்துவ சச்சிதாநந்தத்துவாதி தர்மங்களுள்ள அச் சொரூபத்தோடு பரிபூர்ணமாய் நிறைந்திருப்பது விதிரூப சமாதி யென்பது ஞானிகட்கு அபிமதமென்க.

(வரும்.)

ஓர் ஆரியன்.

சுவிவேக தருப்பணம்.

ஸ்ரீ சாந்தானந்த சாசுவதிசுவாமிகள் ஆந்திரமொழியில் அருளியது.

(வெண்டாமரை ச, இதழ் கக - கஉ, 269-ம் பக்கத் தொடர்ச்சி.)

இத்தகைய எதார்த்தஞானம் விளங்காமற் போவதற்கு முக்கிய காரணம் பிரதிபந்தமேயன்றி வேறன்று. அந்தப் பிரதிபந்தம் பூதப்பிரதிபந்தமென்றும், வர்த்தமானப் பிரதிபந்தமென்றும், பாவிப்பிரதிபந்தமென்றும் மூன்றுவிதமாயிருக்கும்.

ஒருவன், புத்திர மித்திர களத்திரமுதலிய பந்தங்களெல்லாம் காலவசத்தால் நிவிர்த்தியாக, விரத்தியடைந்து சந்நியாசத்தை மேற்கொண்டு சற்குரு சந்நிதியில் சிரவணம்செய்து இலட்சியானுசந்தானம் செய்துகொண்டிருக்கையில், பூர்வ ஆசிரமத்தில் தனக்கு மிகவும் பிரியமாயிருந்த ஒரு பொருள், அக்காலத்தே தனக்குக் காணப்படுதல் பூதப்பிரதிபந்தமெனப்படும். அப்படித் தோற்றும்போது அப்பொருளினுடைய அத்தி பாதி பிரிய நாம உருவங்களென்னும் இலக்கணம் ஐந்தனுள் நாம உருவங்கள் இரண்டையும் தள்ளிவிட்டு அத்தி பாதி பிரியங்களை மாத்திரமே தானென்று சிந்தித்துக் கொண்டிருந்தால், அந்தப் பிரதிபந்தம் சிறிதுகாலத்திற்குள்ளே நசித்துப்போய்ச் சச்சிதாநந்த சொரூபம் சமுசயமின்றிப் பிடிபடும்.

வர்த்தமானப் பிரதிபந்தம், விடயாசத்தி யிலக்கணமென்றும், பிரஞ்ஞாமாந்தியமென்றும், குதர்க்கமென்றும், விபரியய துராக்கிரகமென்றும் நான்குவிதமாயிருக்கும். அவற்றுள் விடயாசத்தி யிலக்கணமாவது, மன்மதனைவிடப் பரமான்மா வேறில்லையென்றும், சிங்காரப் பிரபந்தங்களைவிட உபநிடதங்கள் சிறந்தனவல்லவென்றும், போகமகளிரது சொற்களைவிட வேதவாக்கியங்கள் வேறுள்ளனவாவென்றும், கொக்கோக சாத்திரத்தைவிட வேதாந்த சாத்திரங்கள் உயர்ந்தவையல்லவென்றும், நட விட காயக விதூடகர்களே மகா பண்டிதர்களன்றி மற்றவர் எத்தகையரேனும் பண்டிதர்களெனற்குத் தகாதவர்களென்றும், விடய போகங்களைப் பார்க்கிலும் அதிசயித்த இராசயோகம் ஒன்றுள்ளதென்பது ஆகாயத் தாமரைபோன்றதென்றும், அந்த விடயாநந்தத்தைவிடப் பிரம்மாநந்தம் ஒன்றுண்டென்பது கனவென்றும் நினையாநின்று எல்லா விடயங்களினிடத்தும் கூடமான ஆசத்தியுண்டாயிருத்தல். பிரஞ்ஞாமாந்தியமாவது, குருமார்கள் உபதேசித்த அருத்தம் புத்திக்குப் பிடிக்காமற் போதல். குதர்க்கமாவது, குருமார்கள் போதித்த அருத்தத்திற்கு விபரீத

அருத்தங்கள் தோன்றுதல். விபரியய துராக்கிரகமாவது, நான் பண்டிதனென்றும், சுரோத்திரியனென்றும், பத்தனென்றும், விரத்தனென்றும் தேக இந்திரியாதிகளிடத்தில் ஆன்மத்துவ புத்தியுண்டாகுதல். இவற்றுள் விடயாசத்தி யிலக்கணம், கால கரும வசத்தால் நேரிடும் சற்சகவாசத்தால் உண்டாகின்ற சம தமாதிகளாலும், பிரஞ்ஞா மாந்தியம், இடைவிடாத சிரவணத்தினாலும், குதர்க்கம், மனனத்தினாலும், விபரியய துராக்கிரகம், நிதித்தியாசத்தினாலும் நசித்துப்போகும். இவை நசித்தவுடனே ஆன்ம தத்துவம் உள்ளங்கை நெல்லிக்கனியாம்.

கால நியதியின்றிச் சம்பவிக்கும் சஞ்சித பாவகருமத்தினால் ஒரு விதமாகத் தயையுருவமான ஆசத்தி பிறக்கும். அதுவே பாவிப்பிரதிபந்த மெனப்படும். இந்தப் பிரதிபந்தத்தினாலேயே சடபரதனுக்கு மூன்று பிறப்புக்களும் வேறு சிலர்க்குப் பல பிறப்புக்களும் உண்டாயின.

ஆதலின் இந்தப் பந்தத்திரயங்களை நன்றாக விசாரித்துச் சாத்தியமானவளவு சீக்கிரமாக அவற்றை நிவர்த்திசெய்துகொள்ளவேண்டும். எந்தப்பிறப்பில் இவற்றின் வாசனை சிறிதும் இல்லாமற்போகுமோ அந்தப் பிறப்பில் முத்தியுண்டாகும். இப்படிப்பட்ட முமூட்சுக்கள் சுத்த சித்தத்தையடைந்து, பூமி, மலை, மரம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியசந்திரர்கள், புறா, அசகரம் (ஓர்வகைப்பாம்பு), கடல், விட்டில், தேனீ, வண்டு, யானை, மான், மீன், வேசை, குரரப்பட்சி (அழுமன்றில்), சிசு, கன்னி, சரகருத்தா (அம்புசெய்பவன்), பாம்பு, சிலந்திப்பூச்சி, குளவி—இவற்றின குணங்களை நன்றாகக் கிரகித்து அவ்விதமாகப் பிரவர்த்தித்தால், இதில் உதகரிக்கப்பட்ட பிரத்தியகான்ம பிரமைக்கிய சாட்சாத்கார ஞானத்தினால் உண்டான பேராநந்தத்தை எப்போதும் அனுபவிப்பார்களென்று பிரமஞானிகள் சொல்வார்கள்.

அவற்றின் குணங்களை எப்படிக்கிரகித்துப் பிரவர்த்திக்கவேண்டுமென்றால்:—

1. பூமி, எல்லா வுயிர்களுக்கும் இருப்பிடமாய் அவற்றின் காரியங்களெல்லாவற்றையும் பொறுத்துக்கொண் டிருப்பதுபோல, முமூட்சுவானவன் எப்போதும் பொறுமையோடு கூடியிருத்தல் வேண்டும். பொறுமையின்றி மற்றைய குணங்களெத்தனையிருப்பினும் பயனில்லையென்னும் நிச்சயம் உண்டாயிருத்தல் வேண்டும்.

2. மலை, பல்லுயிர்களுக்கும் உபகரிக்கும் புல், மரம், செடி முதலானவைகள், நதிப்பிரவாகங்கள் முதலியவைகளை யெல்லாம் சிரத்தில்

வசித்துக்கொண் டிருப்பதுபோல, தன்னலத்தைவிட்டுப் பிறர்விடயமாக எப்போதும் உபகாரசிந்தை யுண்டாயிருத்தல் வேண்டும்.

3. மரம், வேரை வெட்டினபோதிலும், கிளைகளை வெட்டின போதிலும், செதில்செதிலாகச் செதுக்கினபோதிலும், பிறருக்கு உபகரிப்பதுபோல, பிறர் நன்மை நிமித்தமாகத் தனக்கு ஆபத்து வந்த போதிலும் நிச்சல சித்தத்தோடு பின்வாங்காதிருத்தல் வேண்டும். தன்னை வெட்டவந்தவனுக்குக்கூட நிழலைக் கொடுப்பதுபோல, அபகாரம் செய்பவனுக்கும் உபகாரம் செய்தல் வேண்டும்.

(வரும்)

குருபாதசேகரன்.

புத்தக நன்கொடை.

புதுவை ஸ்ரீமான் மு. சஞ்சீவிஐயர் அவர்கள், 1. இலக்கண நூல், 2. திருவிளையாடற்புராணம் மூலம், 3. வாசுதேவமுதலியார் இலக்கணம், 4. நாலடியார், 5. சிவசிவவெண்பாவும், சோமேசர் முதுமொழி வெண்பாவும், 6. நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி, 7. விறலிவிடுதூது, 8. திருவேங்கடத்தந்தாதி, 9. சடகோபரந்தாதி, 10. திருவரங்கத்தந்தாதி, 11. திருவேங்கடமாலை, 12. வேமன்னபத்தியம், 13. பிரமோத்தரகாண்டம், 14. பிரபோத சந்திரோதயம், 15. புதுவைக் கலம்பகம் ஆகிய பதினைந்து புத்தகங்கள் நமது கலைமகள் கழகத்தின் புத்தக நிலையத்திற்கு நன்கொடை யளித்தார்கள். இவர்கள் இதற்கு முன்னும் சில புத்தகங்கள் நன்கொடை யளித்துள்ளார்கள்.

அன்பு கூர்ந்து மேற்படி புத்தகங்களை யுதவிய பரோபகாரகுணம் படைத்த நமது ஐயரவர்களுக்கு, புதுவைக் கலைமகள் கழகத்தார் பெரிதும் நன்றி செலுத்துகின்றார்கள்.

தி. திருப்புளிசாமி ஐயர்,
கழகத்தின் காரியதரிசி.

ஓர் அனுதாபம்.

புதுவைக் கலைமகள் கழகத்தின் உதவிக் காரியதரிசியாயிருந்தவரும், மேற்படி கழகத்தின் வளர்ச்சியில் அன்புகொண்டு பெரிதும் பாடுபட்டவருமாகிய கனம் பொன்னு-கிருஷ்ணசாமி நாயகர் தேகவியோக

மடைந்தனர். இவரது பிரிவால் கலைமகள் கழகம் என்னும் தாய், ஊக்கமும் உழைப்புங்கொண்ட ஒரு நல்ல புதல்வனை இழந்துவிட்டனள். நற்குணங்கள், நிறைந்த தோழர் ஒருவரைப் பிரிய நேர்ந்ததுபற்றி, கலைமகள் கழகத்தார் பெரிதும் வருந்துகின்றார்கள். இளமைப் பருவத்தில் தமது தம்பியை இழந்து வருந்தும் இவரது சகோதரர் முதலியவர்கட்கும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவிக்கின்றார்கள்.

தி. திருப்புளிசாமி ஐயர்,
கழகத்தின் காரியதரிசி
புதுவை,

காலஞ்சென்ற பண்டிதர் வெ. தில்லைநாயக முதலியார்.

இவர் சிதம்பரத்தில் செங்குந்தர் மரபினர்க்குத் திலகம்போல் விளங்கினவர். தமிழ்ப்புலமை நிரம்பப்பெற்றவர். இவரியற்றிய குமாரவேள் மும்மணிக் கோவையே இவரது அறிவின் ஆற்றலை விளக்கும். மாணவை மண்ணுறுத்துஞ் செல்வமும் பெற்றுத் திகழ்ந்தவர். சைவ சித்தாந்தத்தில் பெரும்பற்றுடையவர். வைதிக ஒழுக்கம் நிரம்பியவர். ஆறுமுகநாவலர் பாடசாலையில் ஆறாவது வகுப்புக்குப் போதகாசிரியராக இருந்தவர். பல்லோரைக் கல்வியில் வல்லோராக்கினவர். நமது கலைமகளுக்குச் சந்தாநேயராகவிருந்து ஆதரித்தவர். இவ்வரிய நண்பர், நிகழும் பிங்கள வருடம் புரட்டாசி மீ ௨௫ ௳ சிவபதமடைந்ததுபற்றி நாம் பெரிதும் வருந்துவதுமன்றி இவரது குடும்பத்தார்க்கும் நமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

ப—ர்

லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்.

தஞ்சை கனம் P. சுப்பராய் அவர்கள் நம் பார்வைக்கனுப்பிய லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகளை நாம் உபயோகித்துப் பார்த்தோம். அது தன் பெயர்க்கேற்றபடி உயர்ந்த கஸ்தூரிமணம் கமழ்கின்றது. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வருவித்த கஸ்தூரி, தங்கரேக், பச்சைக் கர்ப்பூரம் முதலிய பல விலைபெற்ற மருந்து சாமான்களும் வாசனைத் திரவியங்களும் சேர்த்துச் செய்யப்பட்டிருக்கிறது - என்று அவர்

சொல்லுகிறார். தாம்பூலத்துடன் அதனை உபயோகித்தால் வேறு வாசனை வஸ்துக்கள் உபயோகிக்க வேண்டுவது அநாவசியம்—என்று அவர் கூறுவது நமது அனுபவத்திற்கண்டது. தந்தரோய், வாய்நாற்றம், அஜீரணம், பித்தவாயு இவற்றை நீக்குமென்பதும், இன்னும் அதற்குச் சொல்லப்பட்ட மற்றைய குணங்களும் அனுபவத்தில் அறியத்தக்கவை. அது சீசா ஒன்றுக்கு விலை அணா 4.

சுகந்த பற்பொடி.

இதுவும் மேற்படி சுப்பராய் அவர்கள் அனுப்பியதே. நல்ல ஜீரண சக்தியைத்தரும், பல்வலி எக்காலத்திலும் வாராது, பல் எக்காலத்திலும் விழாது—என்று அதன் குணம் சொல்லப்பட்டிருக்கிறது. கண்ணுக்கினிமையாகவுள்ள அப்பற்பொடியை நாம் உபயோகித்ததில் அதனிடத்து ஒரு நறுமணமும் இன்சுவையும் அப்போது அறியப்படுகின்றன. ஒருவிதமான உற்சாகத்தை யுண்டுபண்ணுகிறது. நாம் உபயோகித்த பற்பொடிகளில் இது வீரியமுள்ளதாகவே காணப்படுகிறது. சீசா ஒன்றுக்கு விலை அணா 3.

இவற்றை நமக்கனுப்பிய தஞ்சை கனம் P. சுப்பராய் அவர்கட்கு நமது நன்றியை அனுப்புகின்றோம்.

ப—ர்

நம் நாட்டுப் பென்ஸில்கள்.

கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்டவை, ஒட்டில்லாதவை.

கறுப்பாக எழுதும்.

1. வார்னிஷ் சிவந்த மரம் குரோஸ் 1-க்கு ரூ. 3—12—0
2. பாலிஷ் சிவந்த மரம் குரோஸ் 1-க்கு ரூ. 3—6—0
3. வெள்ளை மரம் குரோஸ் 1-க்கு ரூ. 1—14—0
4. மங்கல் வெள்ளை மரம் குரோஸ் 1-க்கு ரூ. 1—2—0

தி. ஜானகிராம்,
நெ. 24, கலவைப் பாடசாலைவீதி,
புதுச்சேரி.

கோவர்ஜான் இமிட்டேஷன் பட்டுப்புடவை.

இந்த இமிட்டேஷன் பட்டுப்புடவையானது நாணயமான முந்தாணியும் மாங்காய்கள் போட்டு நேர்த்தியான உறுதி கரைகட்டி வெகு நன்றாயிருக்கும். மிகு உபயோகமுள்ளவை. பளபளப்போடுங்கூட நெசவு செய்யப்பட்டது. இதில் ரோஸ், பச்சை, சிகப்பு, நீலம், மேகவர்ண முதலிய ரகங்களுமுண்டு, 16-முழம் நீளமும் 2½ முழம் அகலமுள்ள கோவர்ஜான் பட்டுப்புடவை 1-க்கு ரூ. 5—8—0.

சாவித்திரி சரிகைபுடவை.

நெ. 1, 16-முழம் நீளம் 2½ முழம் அகலம் சாதாபட்டு கலந்த முந்தாணியுமுள்ள புடவை 1-க்கு ரூ. 6—0—0

நெ. 2, 16-முழம் நிகளம் 2½-முழம் அகலம் பட்டு சரிகைகலந்த முந்தாணியும் சிகப்பு பட்டுகரையுமுள்ள கறுப்பு சந்திரகளா புடவை 1-க்கு ரூ. 7—0—0.

பந்தர் தவனக்கொடி சேலை.

16-முழமுள்ள தவனக்கொடிபோட்ட சேலை 1-க்கு ரூ. 2—8—0.

பாலாமணி மாங்காய் சேலை.

16-முழமுள்ள வெள்ளை மல்துணியில் மாங்காய் போட்ட சேலை 1-க்கு ரூ. 2—8—0.

எரேசன் அண்டு கம்பெனி.

சௌக்கார்பேட்டை, மதராஸ்.

சி. சி. லிங்கம் புஸ்தகசாலை.

புஸ்தக விளம்பரம்.

பக்தமாலா வசனம். 183 பக்தர்களின் சரித்திரம்.	3	8	0
அத்யாத்ம ராமாயணம்.	2	8	0
சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், மூலமும் உரையும்.	3	0	0
சிகாளத்தி புராணம், மூலமும் உரையும்.	2	8	0
வாத சுந்தரம்.	1	0	0
அமீர்சிங்	0	12	0
வனஜாக்ஷி	0	8	0
ஞான சுந்தரம்.	0	8	0
ஜடாவல்லபர்.	1	8	0
ஆனந்த கதாகல்பகம் அல்லது பிரபஞ்சத்தின் ஆச்சரியகரமான அநுபவ விநோதங்கள்.	2	10	0
அம்புஜ விலாசத்தின் அதிசய சம்பவம்	0	8	0

அடியிற் குறிப்பிட்ட புஸ்தக சாலையில் வேதாந்த, சித்தாந்த, நாவல்ஸ், லா புஸ்தகங்கள் முதலியன கிடைக்கும்.

மானேஜர், சி. சி. லிங்கம் புஸ்தகசாலை,

நெ. 2, இராமானுஜய்யர் தெரு,

சௌக்கார்பேட்டை, சென்னை.

நூதன தமிழ்ப்புஸ்தகங்கள்.

ஔவை, 0—6—0

நம் அருந் தமிழ் மொழியில் சிறந்த நீதிநூல்களையும் தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம்.

மனம்போல் வாழ்வு, 0—8—0

இம்மையின்பத்தையும், மறுமையின்பத்தையும் அடைவதற்குரிய நெறிகளை மிகத் தெளிவாகக் கூறும் ஓர் அரியநூல்.

ஊர்வசியின் சாபம், 0—8—0

ஓர் இனியநாடகம். ப - சம்பந்தமுதலியார் இயற்றியது.

ஆத்திசூடி நீதிக்கதைகள், 0—8—0

அகமே புறம், 0—8—0

இகத்திலும் பரத்திலும் மேலான நிலைகளை அடைவதற்குரிய மார்க்கங்களைக் கூறுவது.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், 0—8—0

ஓர் நூதன நாடகம். ப - சம்பந்தமுதலியார் இயற்றியது.

இந்திய மாதர் சரித்திரம், 0—5—0

இதில் பூர்வகாலத்துப் பெண்மணிகளின் சரித்திரங்கள் எழுதப்பட்டுள்ளன.

அன்புக்கும் அழிவோ? 0—5—0

சோகரஸம் பொருந்திய ஓர் இனிய தமிழ் நாவல்.

ராஜாமணி, 0—8—0

ஓர் உயர்ந்த துப்பறியும் தமிழ் நவீனம்.

நளினாக்ஷி, 0—5—0

இதில் சிறுபெண்களைக் கிழவர்களுக்கு மணம் செய்விப்பதனால் நேரும் கெடுதிகளைப்பற்றி எழுதப்பட் டிருக்கின்றது.

ஸரோஜா, 0—5—0

ஓர் இனிய நாவல்.

ஸாதனா, 0—5—0

பண்டிதை விசாலாக்ஷியம்மாள் எழுதியது.

ஐரோப்பிய யுத்தம், 1—8—0

ஜி. ஏ வைத்தியராமன் இயற்றியது. யுத்தத்தைப்பற்றி அறிய வேண்டிய பலவிஷயங்களும் மிகத்தெளிவாக எழுதப்பட்டுள்ளன.

சாரங்கதர ஸம்ஹிதை, 3—0—0

எம். துரைசாமி அய்யங்கார் எழுதியது. ஆயுர்வேத ஸம்பந்தமான பல விஷயங்கள் இதில் கூறப்பட்டுள்ளன.

நாலடியார் குறிப்புரையுடன், 0—8—0

துசேலர், 1—0—0

எம். வி. கோவிந்தராஜ ஐயங்கார் இயற்றிய ஓர் நாடகம்.

பிரஹசனங்கள், 0—8—0

ஹாஸ்யரஸம் பொருந்திய மூன்று நாடகங்கள் அடங்கியுள்ளன. ப. சம்பந்தமுதலியார் எழுதியது.

மானேஜர்,

ஜனோபகாரி ஆபீஸ்,

(க) வேலூர்.

தேகாரோக்கியம் திரண்ட செல்வம் தீர்க்காயுள்	இவைகள்	ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை உப யோகிப்போருக்கு உண்டாகின்றன

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

எவ்வித காரணத்தாலும் ஏற்படுகிற பலஹீனத்தைப்போக்கி அதி சீக்கிரத்தில் சாசுவதமான குணத்தைக் கொடுக்கும்படி தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

அவைகள் ஆரோக்கியமான பசி தீபனத்தைக் கொடுத்து, தேகத்துக்கும் மனதுக்குமுள்ள பலஹீனத்தை நீக்கி, கெட்ட ரத்தத்தை சுத்திகரித்து ஞாபக சக்தியைத் தீட்சணியப்படுத்துகிறது.

சரீரத்தில் சளைத்துப்போன நரம்பு ஸ்தானங்களை ஆறுதல் செய்து லகுவான ஜீரணசக்தியைக்கொடுத்து, அவயவங்களுக்குத் தக்க திடத்தையும், ஊக்கத்தையும் கொடுத்து, இளமையிலுள்ள அழகை அடையும்படி செய்கிறது.

இந்த மாத்திரைகள் பொதுவாக அங்கங்கள்தோறும் சக்தியைக் கொடுக்கும் சிறந்த பலவிருத்தி மருந்து. இவைகளின் குணத்துக்கு இதர மருந்துகள் இணையாகாது. இன்னும் சரீர சத்ருக்கள் அணுகாவண்ணம் வைரக் கோட்டையைப்போல் செய்து காப்பாற்றுகின்றன.

ஒரு டப்பியை வாங்கி உபயோகித்துப் பாருங்கள். அவைகள் "பகற் போஜனத்துக்குப் பிறகு தங்கம்போலும், இராப் போஜனானந்தரம் ரத்னம்" போலுமுள்ளது.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1. இன்னும் எங்கள் மருந்தின் மகத்துவத்தை அறிய விரும்புவோர் எங்கள் புதிய காட்லாக்குக்கு எழுதுங்கள். இனாமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே 96, மவுண்ட் ரோட், மதராஸ்.